1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்திய வேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 38-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 27-ந் திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## ஜசிந்தாவின் மணிமொழிகள்

பாத்திமாபதியிலே பரிசுத்த அன்னையின் காட்சிபெற்ற பிரான்சீஸ், ஜசிந்தா, லூசியா எனும் மூன்று பிள்ளைகளிலும் ஜசிந்தாவின் தமையன் பிரான்சீஸ். பரகதிக்கு முந்த அழைக்கப்பட்டவன் இவனே. பிறகு ஜசிந்தா நோய்வாய்ப்பட்டு வருந்துகிறள். மரணமும் அண்மிக்கொண்டு வருகிறது. அவளின் அந்தியகால மணிமொழிகள் இவையாகும்.

பிரான்சிஸ் சாகுமுன் ஜசிந்தா அவனிடம் பலசெய்திகள் சொல்லிஅனுப்பினுள். "ஆண்டவருக்கும், தேவதாயாருக்கும் என்வந்தனங்களைத் தெரிவிப்பாய். பாவிகளுக்காகவும், மரியாயின்மாசற்ற இருதயத்துக்குச்செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாகவும், யேசுவும் தேவதாயும்விரும்பும் வேதனைகளையெல்லாம் நான்படத் தயாராய்இருப்பதாக அவர்களிடம் சொல்" என்றுள்.

"கடவுள்விரும்பும் எல்லா வேதனைகளையும் சகிப்பதே" அவளுடைய வாழ்க்கையின் நோக்கமாய்இருந்தது. ஜசிந்தா இயல்பாக ஆடல்பாடல்களை அளவுக்குமிஞ்சி விரும்பியவள். ஆவலாதிகூறுவாள். இப்பொழுதோ கடவுளினது வரப்பிரசாதம் அவளை மாற்றிவிட்டது. கடினவேதனைகளையும் பொறுமையுடன் சகித்துவந்தாள். தனது ஆத்துமத்தையும், மற்றவர்களின் ஆத்துமங்களையும் இரட்சிப்பதே உலகில் அதிமுக்கிய காரியம்என்பாள். ஒன்பதுவயதுச் சிறுமியான அவள் வேதசாட்சிகளைப்போல் வீரத்துடனும், நேசத்துடனும் வேதனைகளை ஏற்றுக்கொண்டாள்.

நாளாகஆக, யேசுமரியாய்மீது அவளுக்குள்ள நேசம், தேவசித்தத்துக்குப்பணிவு, பரித்தியாகம்முதலியன அதிகரித்துவந்தன. மோட்சத்தில் அழகிய கிரீடம்ஒன்று சம்பாதிக்க இவ்வுலகில் நேரம்இருக்கும்வரை வெகுமுயற்சிசெய்யத் தீர்மானித்தவள்போல் காணப்பட்டாள். அன்னன் பிரான்சிஸைப்பற்றி அடிக்கடி நினைத்தாள். "அவனைப்பார்க்க நான் எவ்வளவு ஆசிக்கிறேன்!" என்று கண்ணீருடன் கூறுவாள். அவனிருந்தஇடத்துக்குப்போக, தான்நேசித்த யேசுவுடன் இருக்க அவள்விரும்பினுள். "ஓ, என் யேசுவே, நான்உம்மை நேசிக்கிறேன்" என்னும்செபம் அவளுக்குமிகப் பிரியமானது, அதைஅடிக்கடி சொல்லிவருவாள். லூசியா அவளைபபார்க்க வந்தால் அந்தச்செபத்தைத் தன்னுடன்சேர்ந்து சொல்லும்படி கேட்பாள். "நான்யேசுவை நேசிப்பதாக அவரிடம்சொல்ல ஆசிக்கிறேன். அதைச்சொல்லும்பொழுதெல்லாம் என்நெஞ்சில் ஒருசுவாலை, சுட்டெரிக்காத சுவாலை இருக்கிறுப்போல்உணர்கிறேன். நமதுஆண்டவரையும், பரிசுத்த கன்னித்தாயாரையும் நான்மிகநேசிக்கிறேன். இதைத் திரும்பத்திரும்ப அவர்களிடம் சொன்னுலும் நான் சலிப்புக்கொள்வதில்லை."

தனதுகொடிய நோயையும் யேசு மரியாய்மீது தான்கொண்ட நேசத்துக்காகப் பொறுமையாய்ச் சகித்துவந்தாள். இன்புளுவென் சாக்காய்ச்சலிலிருந்து வேறுபலநோய்களும் வந்தன. சுவாசப்பையும் நோய்வாய்ப்பட்டது. சிலசமயங்களில் வெகு வேதனைப்பட்டாள். ஆனுல், அதைவெளியே காண்பிக்கமாட்டாள். "ஜசிந்தா இப்பொழுது உனக்குத் தாவிளையா?" என லூசியா கேட்டாள். "இல்லையென்று உனக்கு நன்ருகத் தெரியுமே. என் விலா எவ்வளவு புண்ணுய் இருக்கிறது. ஆனுல், பாவிகளுக்காக அதைச் சகிக்கிறேன்" என்பாள். தபசாகத் தான்தரித்திருந்த கயிற்றைலூசியிடம்கொடுத்து "இதை வைத்துக்கொள், அம்மா இதைப் பார்த்துவிடுவார்கள்என அஞ்சுகிறேன். எனக்குச்சுகமானுல் திரும்பக்கேட்டு வாங்கிக்கொள்ளுகிறேன்" என்ருள். அதில் மூன்றுமுடிச்சுகள் இருந்தன. சிறிது இரத்தக்கறையும் படிந்திருந்தது. லூசியாஅதைப் பத்திரமாய் மறைத்துவைத்திருந்து பின்னர் பிரான்சிஸின் கயிற்றை எரிக்கையில் அதையும் சேர்த்து எரித்துவிட்டாள்.

ஜசிந்தாவின் தாயான ஒலிம்பியா தனதுமகளின் நிலையைப் பார்த்துவருத்தினுள். "அம்மா! ஏன் விசனப்படுகிறீர்கள்?நான் நன்ருய்இருக்கிறேனே" என்று ஜசிந்தா கூறினுள். "அம்மா! வருந்தவேண்டாம், நான்மோட்சத்துக்குப் போகிறேன், அங்கு உங்களுக்காக அதிகம்வேண்டிக்கொள்வேன்" என இன்னெருநாள் சொன்னுள்.

(தொடரும்)

## கிறீஸ்துநாதர் நம்தலைவர்

"என்ன அகழியின்மீதுபாலம் அமைத்தாகிவிட்டதா? கோட்டைமதிலில் பாலம் சரியாகப் பொருந்தியுள்ளதா? நமதுகுதிரைகள் செல்லும்போது பாலம் தகர்ந்துபோகாதா?"

"அரசே, எல்லாம்தயார்! பகைவர் உறங்குகின்றனர். கோட்டையினுள்குதிக்க ஏற்ற தருணம்!"

ஒன்றின்பின் ஒன்ருகக் குதிரைகள் அசைந்தன. இருளின் மத்தியில் வீரர்களின் இரகசிய நடமாட்டம்....ஆனுல், ஒருகுதிரைகூட மதிலிலிருந்து கீழே குதிக்கவில்லை. அரசன் விரைந்தான். விபரம்உணர்ந்தான். கோட்டையின் உட்புறத்திலும் ஆழமான அகன்றதோர் அகழி. பந்தங்களின்ஒளி பயங்கரத்தை அதிகரித்தது. ஒளி கண்டபகைவர் விழித்தனர். இனித்தயங்கினுல் தனக்குஆபத்துஎன்பதை உணர்ந்தான்மன்னன். தன்குதிரையைக் குதிமுள்கொண்டு கிளப்பினுன். பாய்ந்ததுகுதிரை அகழியினுள். நீந்திச்சென்றது கரைமேலே. பார்த்தனர் போர்வீரர். மன்னனைப் பின்தொடர்ந்தனர்.

தடார்!....தடார்!....தடார்!.... குதிரைவீரர் அனைவருமே கோட்டைக்குள் குதித்தனர். பலத்தபோராட்டம். இருதரத்தினருக்குமிடையே கைகலப்பு. பகைவர்மாய்ந்தனர். பட்டணம் பிடிபட்டது. நெப்போலியன்சக்கரவர்த்தியின் தீரச்செயல்களில் இதுஒன்று.

கிறீஸ்துவும்ஓர்பாலம்அமைப்பவர்தான். எட்டாத்தொலைவிலிருந்த பரம்பொருளுக்கும் மானிடருக்குமிடையே மகத்தானபாலம் அமைத்ததால் திருச்சபை அவரை Pontifex(=பாலம் அமைப்போன்) என அழைக்கிறது. இந்தப்பாலமே நாம் தெய்வத்தைஅடையும்வழி. இவ்வழி இருண்டபாதையல்ல. கிறீஸ்துவின் தெய்வீக ஒளியால் பிரகாசம்பெற்ற அருட்பாதை. ஆனுல், நமக்குப் பாலம்மட்டும் போதாது.

நாம்பலசாலிகளாய் இருந்தபோதிலும், கூர்மையானகற்களும் முட்புதர்களும் அடர்ந்த செங்குத்தான பாறையில் ஏறத் தயங்குவோமல்லவா? எவ்வளவுக்கு வெளிச்சம் அதிகமோ, அவ்வளவுக்கு அபாயநிலைமை தெளிவுறும், பயமும் அதிகரிக்கும். பந்தத்தின் ஒளியிலே அகழியைக்கண்டு அச்சங்கொண்டனர் நெப்போலியனின் படைவீரர். கிறீஸ்து நம்வாழ்வின் ஒளியானதால், கிறீஸ்துவவாழ்வு எவ்வளவுகடமைகள் நிறைந்தது? எவ்வளவு பொறுப்பு வாய்ந்தது என்பது தெளிவாகத்தெரிகிறது. கீழ்ப்படிதல், தியாகம், உழைப்பு, விடாமுயற்சி தேவையென்பது புலனுகிறது. உடனே ஓர்மயக்கமும் ஏற்படுகிறது. "இதுநம்மால்முடியுமா?" எனநம்பலவீனம் பிரமிக்கிறது; தயங்குகிறது.

— தேனீ —

நெப்போலியன் பாய்ந்தான்; வீரர்களும் பாய்ந்தனர். ஆம் தலைவன் ஒருவன் உண்டெனில், அவன்எவ்வழியோ அவ்வழி தொண்டரும் தொடருவது இயல்பு. சரியொத்த மனிதன் ஒருவன் சாதிப்பதை நானும் செய்ய முடியுமென்ற துணிவு நமக்குஏற்படுகிறது.

கிறீஸ்துகடவுள்—மனிதன். ஆதலின் மனிதஇயல்பை முற்றும்உணர்ந்தவர். நமக்கு உற்சாகமளித்து, ஊக்குவிக்க ஓர் தலைவன் தேவையென்பதை அறிவார். நாம்நடக்கவேண்டிய அதேபாதையில் அவர் முன்பு நடந்துள்ளார். இலட்சியவாழ்வை நடைமுறையில் வாழ்ந்து காண்பித்தார். தூய்மை, அன்பு, சிநேகம், தியாகம்பற்றி அமிர்த போதனைகளைப் போதித்தார். ஆனுல், போதனையோடு நிற்கவில்லை. சாதனையற்றபோதனை சாரமற்றதுஎன்பதை அறிந்த அவர் தம்மனிதவாழ்விலே இவ்வழகிய அம்சங்களைப் பிரதிபலித்தார்.

உதாரணமாக, அவருடைய போதனைகளில் நம்இயல்புக்குக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### மகன் ஒருதுருவானவர்

தம்முடைய புதல்வர் ஓர்யேசு சபைக்குருவாக அபிஷேகஞ் செய்யப்பெற்று இருவருடங்களின் பின், தமது மனைவியார் இருபதுவருடகாலம்செய்துவந்த இடையரூதசெபத்தின் பலனைக் குண்டூரிலே குட்ரா கொற்றையா எனும் 80 வயசுடைய விருத்தாப்பியர் சமீபத்திலே ஞானஸ்நானம்பெற்று அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் நாமத்தைச் சூடித் தற்போது சவுரையாஎன அழைக்கப்படுகின்றார். மூந்த அக்குடும்பத்திலே இவர் மனைவி அநேகவருடங்களின்முன் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில்சேர்ந்துகொண்டாள். பிந்த இவர் புதல்வரான சுப்பையா பீரங்கிபுரத்திலுள்ள யேசுசபை உயர்ந்தகலாசாலையில் படித்து வரும்போது திருச்சபையிற் சேர்ந்துகொண்டார்.

கொற்றையா திடவைராக்கியமுள்ள ஓர் இந்துவாய் இருந்தபோதிலும் தமதுமகன் சிறந்த கல்விபெற்று அரசாங்கத்தில் ஓர் உத்தியோகம் வகிக்க வேண்டுமென்ற ஆர்வங்கொண்டிருந்தமையால் இதைப்பற்றி அவர் கவலைகொள்ளவில்லை. சுப்பையா திருச்சினப்பள்ளியிலுள்ள அர்ச். சூசையப்பர் கல்லூரியிலே எம். ஏ. பரீட்சையில் அரங்கேறியதும் சென்னையிலுள்ள சட்டக்கல்லூரியில் சேர்ந்துகொண்டார். பின்னர் சிலமாசங்களிலே அவர் சட்டசாஸ்திரபடிப்பைக் கைவிட்டு, யேசுசபையில் ஒரு குருத்துவ மாணவராகச் சேர்ந்துகொண்டார். இதை அறியவந்ததும் அந்தவாலிப குருத்துவமாணவரான தமதுமகனை எதுவிதமும் திருப்பிப்போடவேண்டுமென்று தம்மனைவியை நயத்தாலும், பயத்தாலும், இம்சையாலும் புத்திசொல்லி எவ்வளவோபாடுபட்டும் காரியம் கைகூடவில்லை.

அதற்குப்பதில் அவருடைய மற்றப்பிள்ளைகளும் வேதசத்தியங்களைப்படித்து ஒருவர்பின் ஒருவராய் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். கொற்றையாவோ மிகுந்த வைராவியாயிருந்துகத்தோலிக்கசமயத்தில்சேருவதேயில்லையென்று சத்தியமும் செய்துகொண்டார். என்றாலும் காலம்போகப்போக அச்சமயத்தில் அவர்மனம் சாய்ந்ததுடன் அதைப்பற்றித் தம்மைஅயலார் வினவும்போது அவர்களையும் அதன்மட்டிலே மனோற்சாகப்படுத்திவந்தார். சமீபத்திலே மேற்றிராணியாண்டவர் தம்மைக்காணவந்தபோது தமக்கு ஞானஸ்நானம் தரவேண்டுமென்று அவரைக்கேட்டுக்கொண்டார். இவருடைய குருபுதல்வர் வண. ஸ்றன்னிஸ்லாஸ் சுப்பையா சுவாமியவர்களே.

### ஹிற்லரின் ஞானப்புதல்வர்

இரண்டாவது உலகயுத்தத்தில் தோல்வியடைந்த ஹிற்லர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்யுமுன் அவரைப் பார்த்த கடைசியான மனிதன் யார்? அவரின் அதிகாரவட்டாரத்துள்அடங்கிய மாட்டின் போர்மன் என்பவனேயென்று சொல்லப்படுகிறது. இவன்தலையான யுத்தகாதக குற்றவாளியென்று கொள்ளப்பெற்று, விசாரணையின்போது கழுவேற்றிக் கொல்லப்படவேண்டுமெனத் தண்டனைவிதிக்கப்பட்டான். ஓர்நாஸ்திகனும், கடவுளை மிகவும் விரோதித்து வந்தவனுமான இவன் பல்லாயிரக்கணக்கானமரணங்களுக்குப் பொறுப்பாளியென்று கருதப்பட்டான்.

ஆனல், இந்தமனிதனின் புதல்வரான மாட்டீன் போர்மன் தற்போது 21 வயசுடையவராயும், ஆஸ்திரிய குருமடம்ஒன்றில் ஓர் குருத்துவமாணவராயும் இருந்துவருகிறார். இவர் 1930-ம் ஆண்டு பிறந்து ஞானஸ்நானம் அருளப்பெற்றபோது அடொல்வ் ஹிற்லரே இவரின் ஞானத்தகப்பனாயினர். ஆனல், 15-ம் வயதிலே ஓர்நாஸிய பெரியமனிதனின் மகனென்றமட்டிலே மரியாதையாகநடத்தப்படும் சிலாக்கியத்தைப்பெருமல் தந்தையை இழந்த நாடோடியான ஓர் அகதியாயினர். முற்றாக மனமுடைந்து, ஹிற்லரிலே தனக்குண்டாயிருந்த நம்பிக்கையை மீளவும் புதுப்பித்துக்கொள்ள முடியாதவகையில் மிகவும்தளர்ந்தவராயினர்.

இனியென்ன எல்லாம்போய்விட்டதெனத் தோன்றியபோது, மாட்டீன் ஓர் கயத்திற்போய் அடைக்கலம்புகுந்தார். அப்போது அங்கிருந்த ஸ்திரீ தனது நாயகரைநோக்கி, "நிக்கலஸ்! இதுஎங்கள் இன்றையத்தின நற்கிருத்தியமாய் இருக்கிறதெனஉத்தேசிக்கிறேன்" எனக் கூறினர். அங்கே இளைஞரான மாட்டீன் அநேகமாதங்கள் தங்கியிருந்தார். "இங்கே நான் முதற்தடவையாக உண்மையான கிறீஸ்துவசேர்க்கையுடன் பரிசயப்படலானேன். இங்கேதான் எனது சீவியகாலத்தில் முதற்தடவையாக வேதபுத்தகத்தைக் கையிலெடுத்து ஒற்றையொற்றையாக வாசித்தேன்" என்று இவர் தனதுசுருக்கமான சீவியசரித்திரத்தில் எழுதியிருக்கின்றார்.

பிந்தஇவர் திருச்சபைச் சஞ்சிகைகளை வாசிப்பதிலே மிகுந்த கரிசனை எடுத்துக்கொண்டார். அவற்றிலுள்ள சிலகாரியம் அவர் மனதில் ஆழமாகப்பட்டது. "தேவன் பயங்கரமுள்ள ஓர் நடுவராயிருப்பதோ அன்றேல் இரக்கமுள்ள ஓர் இரட்சகராயிருப்பதோ எல்லாம் உன்னைப்பொறுத்தது" என்ற வசனம் இவர் பங்குவிசாரணைக்குருவருடன் ஆழ்ந்துசம்பாஷிக்க வழிபண்ணிவிட்டது. தற்போது இவர் குருமடம்ஒன்றில் படித்துவருகிறார். "ஓர் மிஷனரியாவதே எனது நோக்கமாகும்.....அந்த இலக்கை நான் அடையும்படி தேவன் எனக்குப்பலத்தையும், வரப்பிரசாதத்தையும் அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்" என இவர் எழுதியிருக்கிறார்.

### புத்தகுருமார் மத்தியில்

சீனதேச ஹோனன் மாகாணத்தைச்சேர்ந்த வெய்வெய் நகர் மேற்றிராணியாரான மரியோ சிவெல்லி ஆண்டவர் தமது மாளிகை நிலத்திலிருந்து கம்யூனிஸ்தர்களால் வெளியேற்றப்பட்டுப் புத்தகோவில் ஒன்றிலே உறைவிடத்தைக் கண்டடையப் பலவந்தஞ்செய்யப் பட்டிருக்கின்றார். பூமிதேவதையின் ரியு-ரி-மியாவோ என்ற இப் புராதன புத்தகோவிலான து கதவுகளும், சன்னல்களும் இல்லாதது. அதில்வதியும் எட்டுப் புத்தகுருமாரும் மேற்றிராணியாருக்கு மாத்திரமல்ல, ஆனல் சீனரும, பிறநாட்டினருமான ஏழுகுருமாரும், அநேக சீனக் கன்னியாஸ்திரீமாரும், இவர்களின் அநாதருமாக ஏறக்குறைய 80 பேருக்கும் புகலிடமளித்திருக்கின்றனர்.

### குருமாருடன் செபநிபந்தனை

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள செக்கோசிலவாகியநாட்டுக் கத்தோலிக்கமக்களுக்கும், சிறைவைக்கப்பட்டுள்ள அவர்களின் குருமாருக்குமிடையே ஓர் செபநிபந்தனை பலமடைந்துகொண்டு வருவதாகச் செய்திகிடைத்திருக்கிறது. ஒவ்வோர் இரவிலும் 9 மணிக்கு மூழந்தாட்படியிட்டுச் சிறையிலிருந்துவருகிறவர்களும், நாடுகடத்தப்பட்டவர்களுமான தங்கள் குருப்பிரசாதிகளுக்காகச் செபங்கள்செய்து ஒப்புக்கொடுக்கும்வழக்கம் செக்கோசிலவாகிய கத்தோலிக்க மக்களிடையே பரந்துகொண்டு வருவதாக மேற்குஜேர்மனியிற்போய் அடைக்கலம்புகும் அகதிகள் தெரிவிக்கின்றார்கள். அதே மணிநேரத்திற்தானே சிறையிலுள்ள குருமாரும் தங்கள் ஞானமந்தைகளுக்காக இரகசியசெபங்கள் செய்துவருகின்றார்கள்.

### பிரதமரின் காரியதரிசி

சான்பிரான்சீஸ்கோநகரிலே சமீபத்தில் நடந்தேறிய யப்பானிய சமாதானஉடன்படிக்கை மகாநாட்டுக்குச் சமுகங்கொடுக்கச் சென்றிருந்த யப்பானியதூதுகோஷ்டி திரு. ஜோண் அக்கிரு மற்சூய் அவர்களையும்அடக்கியிருந்தது. இவர் யப்பானிய வெளிநாட்டுக்காரியாலயத்தில் கடமைபார்க்கும் ஓர் கத்தோலிக்க அதிகாரியாவர். இவர் அந்தத்தூதுக்கோஷ்டிக்குத் தலைமைதாங்கிச்சென்ற யப்பானியபிரதமர் ஷிகேரு யோஷிடா அவர்களின் காரியதரிசியாக மகாநாட்டிலே கடமைபார்த்துவரலாயினர்.

### பாப்பரசரின்வழமையானஓய்வு

பரிசுத்தபாப்பரசர் விசேஷ பேட்டிகள், பிரத்தியேக பேட்டிகள்சகலத்தையும் நிறுத்தி இரண்டுவார இளைப்பாற்றி எடுத்துவருகின்றார். காஸ்ரெல் கான்டல்போவிலுள்ள தமது கோடைகால மாளிகையிலே தங்கியிருக்கும்போது ஒவ்வொரு வருடமும் அவர் எடுத்துக்கொள்ளும் வழமையான இளைப்பாற்றி இதுவாகும். அவருடையசுகநிலை அதிகம்நன்றாய் இருந்துவருகிறது. அவர் கண்டவீக்கங்கண்டு வருந்துகிறாரென்றும், சகலபேட்டிகளையும் நிறுத்திவிடுமாறு தமது வைத்தியரான டக்றர் றிக்கார்டியோ லிசி அவர்களால் நிர்ப்பந்தம்பண்ணிக் கேட்கப்பெற்றிருக்கிறாரென்றும் றோமைநகரப் பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகள் தவறானவையென்று வத்திக்கான் அதிகாரிகள் மறுத்திருக்கிறார்கள். தமது விடுமுறையிற்றானும் காஸ்ரெல் கான்டல்போவிலே பரிசுத்தபிதா இன்னுமே மூன்று பொதுப்பேட்டிகள் அருளுவாரென வத்திக்கான் அதிகாரி ஒருவர் அறிவித்திருக்கின்றார்.

## இஸ்பீரீ. ஆக. பின்வரும் 20-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

( அரு. 4 : 46—53)

அக்காலத்தில் கப்பர்நவும் ஊரில் ஓர் பிரபு இருந்தான். அவன்மகன் வியாதியாயிருந்தான். அவன்யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு யேசுநாதர் வந்திருக்கிறதாகக் கேள்வியுற்று, அவரிடத்தில்புறப்பட்டுப்போய், அவர்வந்து தன்குமாரனைச் சௌக்கியப்படுத்தவேண்டுமென்று மன்றாடினன். ஏனெனில், அவன்மகன் சாகிறதருணமாய்இருந்தான். அப்பொழுது யேசுநாதர்: நீங்கள் அற்புதங்களையும் புதுமைகளையும் கண்டாலொழிய விசுவசிக்கிறதில்லை என்று அவனுக்குச்சொல்ல, பிரபுஅவரைநோக்கி: ஆண்டவரே, என்குமாரன் இறக்குமுன் வாரும் என்றதற்கு, யேசுநாதர் அவனைப்பார்த்து நீ போகலாம்; உன்குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அம்மனிதன் யேசுநாதர் தனக்குவசனித்தவார்த்தையை விசுவசித்து வீட்டுக்குச்சென்றுகொண்டிருந்தான். ஆனல், அவன் அப்படிப்போகையில் அவனுடையஊழியர் அவனுக்கு எதிராகவந்து, அவன்குமாரன் சுகமேபிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள். ஆகையால் தன்குமாரன் சௌக்கியம் அடைந்தமணிநேரம் என்னவென்று அவர்களைக்கேட்க, அவர்கள்: நேற்று ஏழுமணிக்குச் சுரம் அவனைவிட்டு நீங்கிற்றென்று அவனுக்குச்சொன்னார்கள். உன்குமாரன் சுகமே பிழைத்திருக்கிறான்என்றுயேசுநாதர் தனக்குச்சொல்லியிருந்த மணிநேரம் அதுவே என்று தகப்பன் அறிந்துகொண்டான். அவன் விசுவசித்ததுமல்லாமல், அவன்குடும்பமனைத்தும் விசுவசித்தது.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

* * *

—இந்தியாவிலே நவமாகவகுக்கப்பெற்ற சாம்பல்பூர்மேற்றிராசனத்தின் மேற்றிராணியாராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கும் மகாவந். எர்மான் வெஸ்றர்மன்ஆண்டவர் பிறப்பில் ஜேர்மனி தேசத்தவராயினும் இப்பொழுது ஓர் இந்தியபிரசையாய் இருக்கின்றார். ஹிந்திபாஷையில் இவர் பெரியபடிப்பாளியாவர். அதில் அநேகபுத்தகங்கள் எழுதியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவர்த்தமானம்

### இமயமலைச் சிகரஏற்றம்

இமயமலையிலே உலகில் மகாஉந்நதமும், 29,002 அடிஉயரமுமான எவறெஸ்ற் சிகரத்திலஏறி அதனைவெற்றிகொள்ளவென்று பிரித்தானியிலிருந்து நால்வர் புறப்பட்டிருக்கின்றனர். இவர்கள் இந்தியாவின்வடகிழக்கு எல்லைப்புறத்திலுள்ள சிறியநாடாகிய நேபாளத்தினூடாகச்சென்று அம்மலையின் தென்மேற்குப்புறமாக அச்சிகரத்தில் ஏறுவதற்கான அதிகம் கஷ்டம்குறைந்த ஓர்வழியைக் கண்டுகொள்வர். இக்கோஷ்டியின் தலைவர் 44 வயசுடையவரான ஈறிக் ஷிம்ரன் என்பவர். இவர் இமயமலையேற்றநிபுணர். இவர்கள் அச்சிகரத்தில் ஏறுவதற்கென்று 2,500 பவுணை செலவிடுவார்கள். பாரத்தைக் குறைப்பதற்காக வானொலிக்கருவியோ, அன்றேல் பிராணவாயுவோ தங்களுடன்கொண்டு செல்லமாட்டார்கள். ஆனால், இச்சிகரஏற்றத்தில்முதன்முதலாகப் பெனிசிலின்எனும்மருந்தைக் கொண்டுசெல்வார்கள். பிரித்தானியஅரசாங்க பூமிசாஸ்திரசங்கமும், அல்ப்பைன் கிளப்புஞ்சேர்ந்து அனுப்பிவைக்கும் எட்டாவதுமலையேற்றகோஷ்டி இதுவாகும்.

### சமாதான உடன்படிக்கை

யப்பானியசமாதானஉடன்படிக்கை அத்துணை தாராளமனப்பான்மையுடன் செய்யப்பட்டிருப்பதைக் கவனித்துப்போலும் இத்தாலிய அரசாங்கம் பெரிதும்ஆத்திரங்கொள்வது அதிசயமன்று. கனடாதேச ஒற்றுவாநகரிலே சென்ற 17-ந்திகதிகூடிய அத்திலாந்திக்நாடுகள்சங்கத்திலே இத்தாலியபிரதமரான சிஞ்ஞோர் டே காஸ்பெறிஅவர்கள்பேசியபோது, இத்தாலிக்கும், பிரித்தானிய, பிரான்சிய, அமெரிக்க, ருஷிய வல்லரசுகள்நான்கிற்கும் இடையிலே செய்யப்பட்டுள்ள சமாதான உடன்படிக்கையை நீக்கிவிடவேண்டுமெனக் கேட்டிருக்கின்றார். மேற்குஐரோப்பாவின் பாதுகாப்பிலே பூரணமாகப் பங்குபற்றக்கூடியதாக அந்தஉடன்படிக்கையிலே இத்தாலிக்குப் பாதகமாயிருக்கும் குறைபாடுகளையெல்லாம் ஒழித்துவிடவேண்டுமென்பதே அவரின் கேள்வியாகும்.

### அகதிகளும் சமாதானமும்

தங்கள்வீடுவாசல்களிலிருந்து துரத்தப்பட்டுள்ள அகதிகளாய் ஜேர்மனியிலும், ஆஸ்திரியாவிலும் இருந்துவருகின்ற ஒருகோடிசனங்கள்மத்தியில் வளர்ந்துகொண்டுவருகின்ற கொந்தளிப்பும், அதிருப்தியும் பாராகண்டிதஞ்செய்யப்படுமானுல் அவைகள் உலகசமாதானத்துக்கு அச்சுறுத்துதல்களாக முற்றிவிடுமென்று ஐ. நா. ஸ்தாபன அதிகதிகள்கம்மிஷனரான டக்றர் வான்கொடாற் கூறுகின்றார். ஐரோப்பாவிலுள்ளகோடிக்கணக்கான அகதிகள் ஐக்கியநாடுகளின் சனசமூகத்தில்கொண்டுள்ள நம்பிக்கை முழுவதையும் இழக்கத் தொடங்குகின்றார்கள். இவர்களுடையபிரச்சினை முற்றுமே ஓர்அகதிகள் பிரச்சினை அல்ல; ஆனால், மத்தியஐரோப்பாவின் சமூக, பொருளாதார நிலைமையைப் பலப்படுத்தும் பிரச்சினையாகும். காலநேரத்துடன் இது கவனிக்கப்படவில்லையாயின் சர்வதேசசமாதானத்துக்கும், பாதுகாப்புக்கும் பங்கம் விளைக்கக்கூடியதாகுமென்றும் அவர் எச்சரிக்கின்றார்.

### புதிய ரசாயன நீர்த்தூவல்

மரக்கறிவகைகளை ஒருவருடகாலம் அன்றேல் அதற்குமேற்படப் புதியனபோலப் பாதுகாக்கக்கூடிய புதியரசாயன நீர்த்தூவல்ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் பரிசோதனைசெய்துவருவதாக "கண்றி ஜென்ரில்மன்" எனும் சஞ்சிகை அறிவிக்கின்றது. இந்தத்தெளிக்கும் திராவகம் "மலீக் ஹைட்ருசைட்" அதாவது "எம்எச்" என அழைக்கப்படுகிறது. இது கொண்டு தெளிக்கப்படும் மரக்கறிவகைகளை அற்பசொற்ப பழுதுடன் கப்பலிலேற்றி அனுப்பமுடியுமென்று அமெரிக்கஇராணுவஅதிகாரிகள் நம்புகின்றார்கள். அங்கு மிக்சிகன்அரசாங்க கல்லூரியிலே தோட்டச்செய்கைக்கலையில் ஈடுபட்டுவருகிறவர்கள் வெங்காயம், உருளைக்கிழங்கு, பீற், கரெட், பார்ஸ்னிப்என்றசெங்கிழங்கு ஆதியவற்றிலே இதுகொண்டு பரிசோதனைநடத்தி அனுகூலங் கண்டிருக்கிறார்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?

**1. பழத்தோலைத் தின்னலாமா?**

நாம்பழத்தோலை உண்ணுதல் ஆகாது. காற்று, மழை, அழுக்கு, தூசியிலிருந்தும், சிறியகிருமிகளிலிருந்தும் பழத்தைக்காப்பதற்குத் தோல் பாதுகாப்பாக அமைந்துள்ளது. நமது உடல்வளர்ச்சிக்குத் தேவையான எவ்வகைச்சத்தும் தோலில்இல்லை. இது வயிற்றுள்சென்றால் சமிப்பது கடினம். விழுங்கும்போது அது தொண்டையில் ஒட்டிக்கொள்ளவும்கூடும். ஆகவே, நாம் பழத்தைஉண்ணுமுன் தோலை நீக்கிவிடுதல்வெணடும்.

**2. விலங்குகள் எவ்வாறு போர் செய்கின்றன?**

விரோதிகள் தாக்கும்போது தங்களைப் பாதுகாக்கக்கூடிய அல்லது எதிரிகளைத்தாக்கும்போது தாங்கள் பயன்படுத்தக்கூடிய ஆயுதங்களை உயிர்களுக்கு இயற்கை உதவியிருக்றது. அதிகமூர்க்ககுணமுள்ள புலிக்குக் கூரியநகங்களும், பலமுள்ள முன்னங்கால்களில் பாதங்களும், கூரிய பற்களுமுண்டு. அதற்கு வேகமாகச் செல்லும் தன்மையும் அதிகவலுவும் உண்டு. அது எந்தஎதிரியின்முன்னும் நிற்கக்கூடியது. கங்காருவின் முதன்மையானஆயுதம் அதன்பின்னங்கால்கள். அதுஅவற்றால் எதிரியை அடித்துக்கொல்ல முடியும். ஒட்டகமும், "பபூன்" (Baboon) என்னும் குரங்கும் எதிரியைக் கடித்து வெருட்டும். மான், மலைஆடு, எருமை போன்றவை போரிடும்போது கொம்புகளைப் பயன்படுத்தும். சிங்கமும், கரடியும் தங்கள்முன்னங்கால்களின் பாதங்களால் எதிரியை அடித்துக்கொல்லும். "உவால்றஸ்" என்னும் ஒருவகைநீர்நாயும் பன்றியும் தங்கள் தந்தம்போன்ற பற்களைப்பயன்படுத்தும். பாம்புகள் எதிரியை உடலால் வளையமிட்டுச் சுற்றிநெரித்தும், விடப்பற்களாற் கடித்தும்கொல்லும். யானையும், எருமையும் எதிரியை உழக்கிக்கொல்லும். சிலமீன்கள் மின்சாரஅதிர்ச்சியை உண்டாக்கி எதிரியைக்கொல்லும்.

**3. தலையில் எத்தனை மயிர்கள்?**

தலையில் எத்தனைமயிர்கள் இருக்கின்றனஎன்று நிதானமாகக்கூறமுடியாது. கறுப்புமயிருள்ள மனிதன் தலையில் 1,40,000மயிரும் மங்கல்அல்லது வைக்கோல்நிறமுள்ள ஒருவனின் தலையில் 1,09,000 மயிரும்உண்டு. ஒவ்வொரு மயிரும் நாலுஅவுன்ஸ் பாரத்தைத் தாங்கக்கூடும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளின்முன் சீனரும், யப்பானியரும் தலைமயிரிலிருந்து கயிறுசெய்தார்கள். இவ்வகைக் கயிறுகளில் ஒன்று லண்டன்நகர விநோதபொருட்காட்சிச்சாலையில் உள்ளது. இதன் நீளம் பலஆயிரம்அடி. பாரம் இரண்டுதொன்.

**4. சுத்தமானதங்கத்தில் எத்தனைமாற்று?**

சுத்ததங்கத்தில் 24 மாற்று (Carat) 18 கறற். தங்கம்என்றால் அதில் 18 பங்குதங்கமும், மீதிவேறு உலோகமும் என்றுபொருள்படும்.

**5. மனிதனுக்கோ, நாய்க்கோ அதிகபற்கள்?**

மனிதனுக்கு, முப்பத்திரண்டு பற்களுணடு. நாய்க்கு நாற்பத்திரண்டு பற்கள்.

**6. எப்பிராணிகள் அதிககாலம் வாழ்கின்றன?**

ஒருயானை 200 ஆண்டும், ஒருபெரிய கடலாமை 300 ஆண்டும் வாழ்ந்தன. முதலையும், திமிங்கலமும் இன்னும் அதிககாலம் வாழக்கூடுமென நம்பப்படுகிறது.

**7. எல்லாப்பறவைகளும் பறக்குமா?**

சிலபறவைகள் பறக்கமாட்டா. தீக்கோழி பறக்கமாட்டாது. இதன்கால்கள் வலுவுடையன. இது காலால் உதைந்து ஒருமனிதனைக்கொல்லும் அல்லது அவனுடையகாலை முறிக்கும் வலுவுள்ளது. பறக்கமுடியாவிடினும் இது வேகமாகஓடும். மணிக்கு 60 மைல்வேகத்தில் ஓடுகிறதுஎன அறியப்பட்டுள்ளது. எமு (Emu), கசோவாரி (Cassowary) என்பன பறக்கமாட்டாத ஆஸ்திறேலிய பறவைகள். எதிரியால் துரத்தப்பட்டு அகப்படும் தறுவாயில் அதுதற்காப்பின்பொருட்டு நகமுள்ள தனதுபாதங்களைத் தீக்கோழியைப்போல் பயன்படுத்தும். பறக்கமாட்டாத இன்னொரு பறவை கிவி (Kiwi). இது ஒருபேட்டுக்கோழியிலும்பார்க்கப் பெரியதன்று. இதற்கு அதன் நீண்ட சொண்டின் நுனியில் மூக்குத்துவாரங்கள் உண்டு. இது பருமையிற் சிறிதாயிருந்தபோதும் மூர்க்கமாகச்சண்டைபோடும். யாதேனும்தாக்கினால் இது தன்பாதங்களைப் பயன்படுத்தும்.

**8. "பிரமிட்" சமாதிகளைக் கட்டியவர் யார்?**

எகிப்திலுள்ள "பிரமிட்" சமாதிகள் அல்லது கூர்நுதிக்கோபுரங்கள் பழைய உலகத்தின் ஏழுஅதிசயங்களில்ஒன்று. பலஆயிரம் ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட இவைகள் இன்னும் உள்ளன. பிரமிட்டுகள்என்பன எகிப்தியஅரசர்களின்கல்லறைகள். அவற்றுள்ஒன்று சியப்ஸ் (Cheops) என்னுமிடத்தில் அதேபெயருடையஅரசனால் கி. மு. 4,700-இல் கட்டப்பட்டதாகும். இது கட்டுவதற்கு ஒவ்வொன்றும 2½தொன் நிறையுள்ள 2,03,00,000 கற்கள் பாவிக்கப்பட்டுள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

**9. மிகப்பெரிய நட்சத்திரம் எது?**

அந்தாரீஸ் (Antares) என்னும் நட்சத்திரம். இது தேள்இராசியில் உள்ளது. இதன்குறுக்களவு சூரியனின் குறுக்களவிலும் 450 மடங்கு, அதாவது 40,00,00,000 மைல்வரையில்.

**10. செவ்வாய்க்கிரகத்தில் உயிர்கள் வாழ்கின்றனவா?**

அங்கு பிராணவாயு குறைவாயிருப்பதால் உயிர்கள் வாழமுடியாது. கீழ்நிலையிலுள்ள தாவரங்கள் இருக்கலாமென்று கருதப்படுகிறது.

### சப்மறின்களின் புதியசத்துரு

சத்துருநாடுகளின் சப்மறின்கள் வருங்காலத்திலே தாக்கவருமிடத்து அவற்றின் தாக்குதல்களிலிருந்து கப்பல்களையும், பிறவற்றையும் பாதுகாக்கக்கூடிய ஆகாயக்கப்பல்ஒன்றை அமெரிக்ககடற்படை கட்டுவித்துச் சமீபத்திலே ஆர்கொன்எனுமிடத்தில் முதன்முதலாகப் பறந்துசெல்லவிடலாயிற்று. இந்தஇனத்தைச்சார்ந்த ஆகாயக்கப்பல்களிலெல்லாம் மிகப்பெரியது இதுவேயாகும். 'சற்-பி-என்' என்று அதிகாரமுறையிலே அழைக்கப்படுகின்ற இது 324 அடிநீளமுடையது. சப்மறின்களைத்தாக்கி ஆழ்த்திவிடுதற்கென்று அமெரிக்ககடற்படையின் அதிகம்புதிய மாதிரியான கருவிகளை அமைக்கக்கூடியவகையிலே இது நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இது மணித்தியாலம் 138 கிலோமீற்றர் வேகத்திலே செல்லக்கூடியதாயினும் கடல்களிலே சப்மறின்கள் நடமாடும்போது அதிகம்குறைந்த வேகத்தில் பறந்து வட்டமிடக்கூடியது.

## நாளுசங்கதிகள்

—பிரித்தானியபாதுகாப்பு மந்திரியான திரு. இம்மனுவேல் ஷின்வெல் அவர்கள் ஒற்றுவாநகரிலே பெண்களின் கனடியகிளப்பில் சென்ற 18-ந் திகதி பேசியபோது, ருஷியா 215 படைவகுப்புகளையும், 300 சப்மறின்களையும், 19,000 போர்விமானங்களையுங்கொண்டதாய்த் தனதுபலத்தை மேலும்பெருக்குவதற்கான பெருமுயற்சிகளைச் செய்துவருகிறதென்பதற்குத் தம்மிடம்தகுந்த அத்தாட்சியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

—அமெரிக்கவரசின் சரித்திரத்தில் முன்னொருபோதுமேயில்லாத மகாப்பிரமாண்டமான பாதுகாப்புச் செலவுத்திட்டம்ஒன்று சென்றவியாழக்கிழமை அமெரிக்க செனற்சபையில் அரங்கேறியிருக்கிறது. இதன் மொத்தத்தொகை 57 கோடி டலர் குறைய 6,000 கோடி டலராகும். இந்தப்பிரமாண்டமானபணத்தொகை அமெரிக்க இராணுவபலத்தின் அமைப்புக்கென உபயோகிக்கப்படவிருக்கிறது.

—இளம்பிள்ளைவாத சம்பந்தமாகச் சமீபத்திலே கொப்பனேகென்நகரிலே கூடிய இரண்டாவது உலகமகாநாட்டுக்கு 38 நாடுகளைச்சேர்ந்த 530 பேருக்குமேற்பட்ட விஞ்ஞானிகள் சமுகமளித்தனர். அமெரிக்கஆராய்ச்சியாளர் இளம்பிள்ளைவாதங்கண்டவர்களுக்குச் சல்பாமருந்துகள்கொண்டு ஓர்புதியமுறையைக் கண்டுபிடிப்பதாக அதற்குச்சமுகமளித்த அமெரிக்கரான டக்றர் டேவிற டிபெற்ஸ் தெரிவித்திருக்கிறார்.

—மாடியப்பிரதேஷ்என்ற இந்திய மத்தியஇராச்சியத்தின் உள்நாட்டுமந்திரியாக முன்னர்இருந்த திரு. டி.பி. மிஷ்ரஅவர்கள் இந்தியாவிலே கம்யூனிஸத்தை எதிர்த்துப்போராடும் அரசியல் முன்னணிஒன்றைத் தாம்ஆக்கவிருப்பதாக அறிவித்திருக்கின்றார். இவர்சமீபத்திலே பண்டிதநேருவைச் சர்வாதிகாரியெனக் கண்டனஞ்செய்துவிட்டு இந்தியதேசிய காங்கிரஸில் இருந்து விலகியவர்.

—ஆஸ்திறேலியாவிலே மெல்போன் நகரில் பிறர்சிநேகசபைக் கன்னியாஸ்திரீமாரால் நடத்தப்பட்டுவருகின்ற அர்ச். வின்சென்ற் ஆஸ்பத்திரியிலே வைத்தியசாஸ்திர ஆராய்ச்சிஸ்தாபனம் ஒன்றை அமைக்குமாறு பந்தயக்குதிரைகளைப் பயிற்றுவதில் பேர்பெற்றவராயிருந்து காலஞ்சென்ற ஜாக்சன் ஹொல்ற் என்பவர் தமது மரணசாதனத்தில் ஒருலட்சம் பவுண் விட்டுப் போயிருக்கிறார்.

—நிகழும் புரட்டாசிமாதத்திலே இந்தியாவுக்கு இரண்டரைலட்சம் தொன் கோதமை ஏற்றிச்செல்ல மேலும் ஏழுகப்பல்களை அமெரிக்க தேசிய கப்பல்நிர்வாகசபை ஏற்பாடு செய்துள்ளது. சென்றஆடிமாதம் தொடங்கிய திட்டப்படி இதுவரை மொத்தமாக 2 லட்சத்து 68 ஆயிரத்து 838 தொன் கோதுமை இந்தியாவுக்குக் கப்பலேற்றப்பட்டிருக்கிறது.

* * *

### அரசியல் வாக்துவாதம்

மாத்தறையைச்சேர்ந்த ஹைலண்ட வாத்தோட்டத் தொழிலாளர்சிலரிடையே உண்டான அரசியல்வாக்குவாதத்தின்பயனக ஒருவன்கொல்லப்பட்டதாகச் செய்திகிடைத்திருக்கிறது. தன்னை ஓர்கம்யூனிஸ்தனென்றுசொல்லிக்கொண்ட சுப்பையா சுப்பிரமணியம்என்பவனுக்கும், தொழிலாளர்காங்கிரஸைச்சேர்ந்த எல். கதிரேசன், எம். மாரிமுத்து, வி. வெங்டாசலம் எனும் மூவருக்குமிடையே அரசியல் விஷயமாய் உண்டானவாக்குவாதம் கடைசியாகச் சண்டையில்முடிந்து. அதிலே முந்திய சுப்பிரமணியம் என்பான் கத்தியாற்குற்றுண்டு பின் மாத்தறைஆஸ்பத்திரியில் இறந்து போயினன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**புரட்டாசிமாதம் 1951**

வெ 28 அர்ச். வெஞ்செஸ்லாஸ் (சி)
சனி 29 அதிதூத. அர்ச். மிக்கேல் (சி)
ஞா 30 இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 20-ம் ஞாயிறு — அர்ச். இயரோணிமுஸ் (வெ)

**ஐப்பசிமாதம் 1951**

திங் 1 அர்ச். ரெமிசியார் (வெ)
செவ் 2 காவலான சம்மனசுகள் (வெ)
புத 3 குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாள் (வெ)
வியா 4 அர்ச். பிரான்சீஸ்கு அசீசியார் (வெ)


சத்தியவேத
# பாதுகாவலன்
1951-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 27-ந் திகதி


## செபமாலைநாயகிநாமே

இயற்கைஎழில்வாய்ந்த பாத்திமா திருப்பதியிலே எழுபதினாயிரம் மக்கள் குழுமியிருந்த சமுகத்திலே பரிசுத்ததேவதாயார் ஜசிந்தா, பிரான்சீஸ், லூசியா எனும் பிள்ளைகள்மூவருக்கும் கடைசிமுறையாகக் காட்சியளித்ததினம் ஐப்பசிமாதம் 13-ந்திகதியாகும். அன்று காலைமுதல் அதிக மந்தாரமாயும், குளிராயும் இருந்தது. மழையும்விடாமல பெய்துகொண்டிருந்தது. இவையெல்லாம்பலருக்கும் மனக்கிலேசத்தை உண்டுபண்ணியது. ஆயினும் மத்தியானவேளை திடீரென மழை நின்றுவிட்டது. அப்போது அம்மூன்று பிள்ளைகளிலும் லூசியாஎனும் சிறுமி "இதோ காட்சிநாயகி வருகின்றார்; காட்சிநாயகி வருகின்றார்" என்று மிகுந்த மனவெழுச்சியுடன் கூறினாள். ஆனால், அவளைத்தவிர வேறெவரும் அக்காட்சியைக் கண்டுகொள்ளவில்லை. அப்போது அவள் அத்திருநாயகியைநோக்கி, அம்மா! நீங்கள்யார்? நீங்கள் என்னிடம் கேட்பதென்ன?" என்றுகேட்டாள்.

அதற்கு மறுமொழியாகச் "செபமாலைநாயகி நாமே. நமக்குத்தோத்திரமாக இவ்விடத்திலே ஒருசிற்றாலயம் கட்டப்பட வேண்டுமென நாம் விரும்புகிறோம். அனுதினமும் செபமாலை சொல்லவேண்டும், மனிதர் தங்கள்சீவியநடபடிகளைத்திருத்திப் பாவத்துக்காகத் தபஞ்செய்ய வேண்டும்; சர்வேசுரனிடம்மன்னிப்புக்கோரவேண்டும்; ஏலவே தானே எவ்வளவோ அதிகமாகக் கோபமூட்டப்பட்டிருக்கும் நமதுஆண்டவரை இனிமேலும் கோபமூட்டாதிருக்க வேண்டும்என்று அவர்களைக் கேட்க வந்திருக்கிறோம்" எனத் தேவஅன்னை தெரிவித்தருளினார். "செபமாலைநாயகி நாமே" என்று தம்மை அறிவித்தருளிய செபமாலைநாயகியின் மாதம், செபமாலைப்பத்திக்குரிய மாதம், செபமாலைப்பக்தர்களின் மாதம் ஐப்பசிமாதம்.

நமதுபரிசுத்த பிதாவாகிய பன்னிரண்டாம்பத்திநாதபாப்பரசர், இந்தமாதத்தைப் பயன்படுத்தி "நமதுகாலத்தில் மிக மோசமாயிருக்கும் துக்ககரமானநிலைமைகள் திருத்தமுறும்படியாகத் திருக்கன்னிமரியாயின் சலிகையை அடைந்துகொள்ளத்தக்கதாய் வருகிற ஐப்பசிமாதத்தை வேகமான பத்தியனுசாரங்களுக்கென அர்ப்பணஞ்செய்ய வேண்டுமென்று இம்மாதம் 15-ந்திகதியன்று உலகமுழுவதிலுமுள்ள கத்தோலிக்கமக்கள் அனைவரையும் கேட்டிருக்கின்றார். அவர் திருச்சபை மேற்றிராணிமார்களுக்கு விடுத்த சாதாரணநிருபம்ஒன்றிலே வழக்கமான ஐப்பசிமாதப் பத்தியனுசாரங்களை இவ்வருடம் வழமையிலும் மிகக்கூடிய பக்திவைராக்கியத்துடன் நடத்திவரவேண்டுமென்று கத்தோலிக்கர்சகலரையும் கேட்டு, அம்மாசத்தில்செபமாலைசெபிப்பதையே விசேஷவிதமாகச் சிபாரிசுசெய்திருக்கின்றார்.

திருச்சபையிலே தற்போது வழங்கிவருகின்ற பக்திக்கிருத்தியங்களில் செபமாலை அதிகபலனையும், வெற்றியையும் அளிக்கக்கூடியது. திவ்வியபூசைக்குப் பின் இதுவே மிகச்சிறந்த பக்திமுயற்சியாகும். இதனைக்கற்றோர் மாத்திரமல்ல, மற்றோரும், பெரியோர்மாத்திரமல்ல, சிறியோரும் இலகுவில் அனுசரிக்கலாம். இதுபற்றியே அநேகபாப்புமார் இதனைச்சிலாகித்திருக்கின்றனர். ஆனால், செபமாலையிலே பிரியதத்தமந்திரம் சொல்லும்போது தேவஇரகசியங்களை அதாவது நமது திவ்வியகர்த்தர் பிறந்த, பாடுபட்ட, உயிர்த்தெழுந்தருளிய திவ்வியசம்பவங்களைத் தியானித்துவருவதே அதனைத் தக்கவாறுசொல்லும் முறையாகும். என்றுமில்லாத வகையிலே கலங்கித் தத்தளித்துக்கொண்டிருக்கும் இன்றைய உலகைக்காத்துவைக்கக்கூடியது அணுக்குண்டுமல்ல, சலவாயுக்குண்டுமல்ல, படைபண்டாரங்களுமல்ல, செபமாலையென்னும் இணையற்ற ஞானஆயுதமே.

## விசுவாசப் பரப்புதல் ஞாயிறு
### அல்லது
## மிஷன் ஞாயிறு

1926-ம்ஆண்டு சித்திரைமாதம்—25 வருடங்களின்முன் 11-ம்பத்திநாதபாப்பானவர் மிஷன்ஞாயிறை உலகமெங்கும் அனுசரிக்கும்படி நிரூபித்தருளினார். விசுவாசப்பரப்புதல்சபையின் நிபந்தனைகளையும் வெளிப்படுத்தினார்.

I. ஐப்பசிமாசத்தின் கடைசிஞாயிறுக்கு முன்வரும் ஞாயிற்றுக்கிழமையிலே விசுவாசப் பரப்புதலுக்காக விசேஷசெபங்கள்செய்து, அதைப்பற்றிய பிரசங்கமும் சொல்லப்படவேண்டும்.

II. எல்லாப் பூசைகளிலும் விசுவாசப்பரம்புதலுக்காக இயற்றப்பட்ட செபங்கள் தவறாது சொல்லப்படல் வேண்டும்.

III. பூசைநேரத்தில் சொல்லப்படும் பிரசங்கத்திலே விசுவாசப் பரப்புதல் சபை செய்யும்அலுவல்களை விளக்கி, யாவரும் அச்சபையில் சேரும்படி தூண்டிவிடல்வேண்டும்.

IV. அன்றுதினம் நடைபெறும் திருச்சடங்குகளி[illegible] நிறைந்த இருதயத்தோடு பங்குபற்றி அஞ்ஞானிகள் மனந்திரும்பும்படியாக மன்றாடுகிறவர்கள் 7 வருடப் பலன் அடைந்துகொள்ளலாம். விசேஷ திருச்சடங்குகள் நடைபெறுதகோவில்களிலே செபங்களைச் சொல்வதினால் அப்பலனை அடைந்துகொள்ளலாம்.

V. தேவநற்கருணைபெற்று அஞ்ஞானிகளுக்காக மன்றாடுகிறவர்கள் உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுக்கக்கூடிய ஓர்பரிபூரணபலனையும்அடைந்துகொள்ளலாம்.

VI. திவ்வியபூசையும் விசுவாசப்பரம்புதலுக்கென நியமிக்கப்பட்ட பூசையாகும்.

### மிஷன்ஞாயிறின் நோக்கங்கள்

I. அஞ்ஞானிகள் மனந்திரும்ப மன்றாடுவது.

II. விசுவாசிகள் வேதப்பரப்புதல் வேலையில் ஈடுபடமுயற்சிப்பது.

III. விசுவாசப்பரப்புதல் சபையில் அங்கத்தவர்களைச் சேர்ப்பதும், அதற்காகப் பணத்தண்டல் செய்வதும்.

### ஒழுங்குமுறைகள்

I. பலன்களை அடைய யாவரும் தேவநற்கருணை பெறுதல்.

II. வேதப்பரப்புதல் இயக்கமானது பரிசுத்தமாதாவாகிய திருச்சபையிலே அதிகபக்தியை மூட்டுவதற்கு ஓர்வழியாயிருப்பதால் திருச்சபையின் ஆச்சரியத்துக்குரியவிருத்தி, அதன்பரிசுத்ததனம், சேவை, ஒற்றுமை ஆதியவை பற்றித் திவ்வியபூசையில் பிரசங்கம் செய்தலும், வேறுகூட்டங்களில் சொற்பொழிவு நிகழ்த்துதலும்.

III. சற்பிரசாத ஆசீர்வாதநேரம் சுதேசகுருமாரின் சபையைப்பற்றி விளங்கப்படுத்தல். குறித்தசெபங்களைச் சொல்லல்.

IV. புதுஅங்கத்தவர்களைச் சேர்த்தல்.

### விசுவாசிகளின் கடமைகள்

வேதத்தைப்பரப்பும் அலுவல் சர்வேசுரனுடையஇராச்சியத்தில்கிறீஸ்தவர்களுக்குள்ள ஆவலையும், கரிசனையையும் சுட்டிக்காட்டுகின்றது. இதைப்பார்க்கிலும் மேலானஅலுவல் ஒன்றுண்டோ? தமது திருச்சபை விர்த்தியாக நமது இரட்சாபெருமான் மனிதனைத் துணைக்கருவியாகத் தெரிகிறாரே! மனிதன்மட்டில் அவருக்குள்ள நம்பிக்கைஎம்மட்டு?

திருச்சபையின்வளர்ச்சி அதன் அங்கத்தவர்களினது ஒற்றுமையிலும், தயாளகுணத்திலும் தங்கியிருக்கின்றது. இந்தஅலுவலிலே சர்வேசுரனுக்கும் கிறீஸ்தவர்களுக்கும் நெருங்கியசம்பந்தம் உண்டு. ஏனெனில், இருபாலாருக்குமுள்ள நோக்கம் ஒன்றே ஒன்று.

I. **செபமும், தருமமும் அத்சியாவசியம்:**— அந்தநோக்கம் நிறைவேறச் செபமே அதிகஇலகுவானவழியாகும். மோசேஸ்முனிவர் தமது கைகளைஉயர்த்திச் செய்தசெபத்தால் இஸ்ருயேல்மக்கள் வெற்றியடைந்தது போல நாமும் செபத்தினால் வெற்றி அடையலாம். பரமண்டலமந்திரத்தில் எங்கள் இரட்சகர் "உம்முடையஇராச்சியம்வருக" என்றுசெபிக்கப்படிப்பித்த பொழுது இவ்வலுவலையே கருதினார்

II. **தருமம்:**— வேதப்பரப்புதலுக்கெனக் கொடுக்கும்பணம் சர்வேசுரனுக்குக் கொடுக்கும் தருமம். அதனால் அது பலனடையாமற்போகுமா? கிறீஸ்தவர்கள் பரித்தியாகஞ் செய்து கொடுக்கும்தருமமே அவர்கள் தேவனிலும், திருச்சபையிலும், ஆத்துமங்களிலும் கொண்டுள்ள மதிப்பின்அளவைக் காண்பிப்பதாகும். அவர்கள் கொடுக்கும் சொற்பபணம் குருக்களாகவும், தேவாலயங்களாகவும், பலிபீடங்கள், பாடசாலைகளாகவும் மாறினால் [illegible]வட்டி என்ன பெரும் மதிப்புடையதாகும்? செபத்தினாலும், தருமத்தினாலும் யாவரும் அப்போஸ்தலர்களென்ற மகிமைப்பட்டம் பெறலாம். அப்போஸ்தலர்களுக்குரிய சம்பாவனையையும் மோட்சத்தில் அடைந்துகொள்ளலாம்.

அதிவண. ஜி. பேட்ரின் O. M. I.
பொதுத்தலைவர் (இலங்கை)

---

வண. கிறிஸ்ரி ஒம்லூ சுவாமியவர்களின் அருமைத் தாயாராகிய என்றிக்கா மரியா என்பவ ஒல்லாந்துதேச லெனற் எனும் இடத்திலே, காத்திராப்பிரகாரம் நோய்கண்டு சென்ற 16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மரணத்திரையில் மறையலானா என்னும் துயரசங்கதி கிடைக்கப்பெற்றோம். தமது அன்பான தாயை இழந்து துக்கிக்கும் வண. ஒம்லூ சுவாமியாரவர்களுக்கு எமது அனுதாபத்தைத்தெரிவிப்பதுடன், இதனை வாசிப்பார் அனைவரும் அவ்வினது ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

R. I. P.

---

## சுதேசவர்த்தமானம்

### வடமராட்சிச் சங்கீதவிழா

வடமராட்சிப்பகுதியிலே தமிழாசிரியசங்க ஆதரவில் சென்ற 21-ந்திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றபாடசாலைச் சங்கீதவிழாப் போட்டியிலே வதிரிதிரு இருதய தமிழ்ச் சிரேஷ்டபாடசாலை நடனப் பகுதியில் முதலாவதுபரிசில் பெற்றிருப்பதாகஅறிந்து சந்தோஷமானோம்.

### அரசருக்குச் சத்திரசிகிச்சை

மாட்சிமைதங்கிய ஆறுவது ஜோர்ஜ் அரசரின் சுவாசப்பையில் ஓர் பகுதியைச் துண்டித்தெடுக்கும் அபாயகரமான சத்திரசிகிச்சை ஒன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை பக்கிங்காம்மாளிகையில் நடைபெறலாயிற்று. சத்திரவைத்தியத்தின்போதும், அதன் பின்னரும் அரசரின்நிலைமை யாதாகுமோவென்றுஉலகமுழுவதுமே பெரும்அங்கலாய்ப்பெழுந்தது. ஆனால், தேவாதீனமாய் அவ்வைத்தியம்நடந்து 48 மணிநேரத்தின்பின் அவர் இரண்டு இரவைச்சுகமாகக் கழித்ததோடு தொடர்ந்துபலம்பெற்று வருவதாகவும்அவரின் டக்றர்மார் அறிவித்திருக்கின்றனர்.

### கவர்னர்-ஜெனறலின்விஜயம்

சமீபத்திலே யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்யவிருக்கும் கவர்னர்-ஜெனறல் சோல்பறி பிரபுஅவர்கள் வருகிற கார்த்திகைமாதம் 5-ந்திகதி காலை 8-30 மணியளவில் இங்குவந்து சேருவார். அடுத்த 8-ந்திகதியன்று இராறெயினில் கொழும்புக்குப் புறப்படுவார். அவரின் விஜயத்திற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு ஓர் கம்மிற்றியை நியமிப்பதற்காக வடமாகாண அரசாங்க ஏசன்றர் திரு. பி. ஒ. பெர்னாண்டோ அவர்கள் வருகிறசனிக்கிழமையன்று ஓர்கூட்டத்தைக் கூட்டவிருக்கின்றார்.

### திரு. வி. குமாரசாமிஅவர்கள்

முன்னர் மேல்மாகாண அரசாங்க ஏசன்றாய் இருந்தவரும், தற்போது லண்டன் நகரிலே இலங்கையின் உதவி ஹைகம்மிஷனாய் இருந்துவருகிறவருமான திரு. வி. குமாரசாமி அவர்கள் சிவிலுத்தியோக சேவையிலிருந்து இளைப்பாறி அரசியலில் ஈடுபடவேண்டுமெனக் கருத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. அவ்வாறு இவர் அரசியலில் ஈடுபடுமிடத்து, வடமாகாணத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக்கோணம்

### ஆசிரியர்களின் ஞானவொடுக்கம்

வருகிற ஐப்பசிமாதம் 24-ம் திகதி தொடக்கம் 28-ம்திகதி வரைக்கும் மருதமடுத்திருப்பதியில் ஓர் ஞானவொடுக்கம் நடக்கும். இதிற்பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்கள் எமக்கு நேரகாலத்துடன் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

மன்னார்ப்பகுதி ஆசிரியர்கள் அனைவரும் இதிற் பங்குபற்றுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

**T. A. J. Mathuranayagam**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 26-9-51.

---

திலுள்ள ஓர் தொகுதிக்குப் பாராளுமன்ற அபேட்சகராகநிற்கத் தீர்மானிக்கக்கூடுமாம். இவர் சமீபத்திலே இலங்கையில் செலவிடவிருக்கும் தமது விடுமுறையின்போது கல்விமந்திரியாரின் பாராளுமன்றக் காரியதரிசியான திரு. கே. கனகரத்தினம் அவர்களின் வட்டுக்கோட்டை ஸ்தானத்துக்குப் போட்டியிடமுடியுமோ என்பதுபற்றி ஆலோசனை நடத்துவாரெனத் தெரிய வருகிறது.

### கொழும்புப் பொருட்காட்சி

அடுத்தவருடம் மாசிமாதத்திலே மிகப்பேராய்நடந்தேறவிருக்கின்ற கொழும்புத்திட்டப் பொருட்காட்சியின்போது அப்பொருட்காட்சி மைதானத்திலே கீழைத்தேசதமிழ்முறைப்படி ஓர் பந்தலையமைக்க அப்பொருட்காட்சியின் யாழ்ப்பாணக் கம்மிற்றி திட்டமிட்டிருக்கின்றது. பொருட்காட்சியின் ஆரம்பத்தினமன்று சிலநடனங்களை அங்குநடத்த யாழ்ப்பாண நடனப்பயிற்சிப்பாடசாலை ஒப்புக்கொண்டிருக்கிறது. களியாட்டவிழாக் காட்சியில் யாழ்ப்பாணத்தமிழரும் ஓர் காட்சியை நடிக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

### கடைசி இரத்தத்துளி

அவிசாவெலைப் பட்டினசங்க மைதானத்திலே ஐக்கியதேசீயக்கட்சிச் சங்கத்தின் ஆதரவில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த ஓர் கூட்டத்திற்குப் போக்குவரத்து மந்திரியார் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் தலைமைவகித்தனர். அதிலே ஸ்ரீமதி குளோடா ஜயசூரிய எனும் பெண்மணி பேசியபோது: அவிசாவெலை ஓர் கம்யூனிஸ்த அரணாகக் கொள்ளப்பட்டது; ஆனால், இன்று இங்குகூடியிருக்கும் பெரியசனத்திரளே காரியம் அப்படியல்லஎன்பதைத் துலாம்பரமாகத் தெரிவித்திருக்கிறது; அவிசாவெலையைச் சேர்ந்த ஆடவர்களும், பெண்மணிகளும், யுவர்கள்யுவதிகளும் கடந்த காலத்திற்போல்இராமல் சனங்களின் பொதுவான சத்துராதியாகிய கம்யூனிஸத்தைத் தோற்கடிக்குமாறு தங்கள் இரத்தத்தின் கடைசித்துளியைச் சிந்துவதற்கு ஒன்றுபட்டிருக்கிறார்கள் எனப் பிரதமரிடம் தெரிவிக்குமாறு சேர் ஜோண் கொத்தலாவல அவர்களுக்கு ஓர் சுபசெய்தியை நான் கொடுக்கமுடியுமெனக் கூறிநின்றார்.

---

—சான்பிரான்சிஸ்கோநகர உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடப்பட்டமையாலே யப்பான் மறுபடியும் உலக அரசியலிற் தலையிடத்தொடங்கியிருக்கிறதென்றும், தான் மேற்குச் சனநாயக சுதந்திரநாடுகளின் பக்கமாகச் சேர்ந்துவிட்டதாகப் பிரகடனஞ்செய்திருக்கிறதென்றும் யப்பானிலுள்ள அநேக செல்வாக்குள்ள பத்திரிகைகள் அபிப்பிராயந்தெரிவித்திருக்கின்றன

# கனவிலும் - நினைவிலும்

(வாழைக்குட்டி வரைவது)

திரு. ஆனைக்குட்டிஅவர்களை ஓர் கால்வாசகர்களுக்கு அறிமுகஞ்செய்து வைக்க வேண்டும்தானென்று வாழைக்குட்டிக்கு ஓர்ஆசைவருகிறதாம். அந்த நாளிலே அரசடிப்பாடசாலையில் அவர் படிக்கும்போதே இந்தஅருமையான பெயரைக் கூடவிருந்துபடித்த ஆரோ ஒருதடிப்பயல் அவருக்குச் சூட்டிவிட்டானும். என்றாலும் ஆளைப்பார்த்தால் இந்தப்பெயர் ஆயிரம்முறையும் அவருக்கு நல்லபொருத்தமான தென்றே ஆரும்சொல்லிவிடுவார்களாம். ஆமாம், இழுவைகண்டால் அடிபார்க்க வேண்டுமா? சரியாய்ச்சொன்னால் ஆள் ஒரு ஆனைக்குட்டிதான். அப்போது குட்டியென்றால் இப்போது... வாசகர்களே அனுமானித்துக்கொள்ளட்டும். இன்று ஒரு ஆனையைப்போல என்றாலும் ஆள் சூதுவாதற்ற ஓர்சுத்தஆத்துமாஎன்றே சொல்லலாம்.

குருவாக்கு என்றால் திரு. ஆனைக்குட்டிக்குத் திருவாக்குத்தான். குருவைக்கண்டதும் கடவுளெனநினைத்துக் கையெடுத்துவிடுவார். எவர்சொல்லுத் தட்டினாலும் குருசொல்லுத் தட்டமாட்டார். எவரைப்பற்றியாவது பிறர் என்னவிதமாயாவது குறை கூறினாலும் நமக்கென்ன, காற்றோடு காற்றாய் நகர்ந்து போகிறதென்று காதிலேவிழுத்தாது மெல்ல அப்பாலே நகர்த்துவிடுவார். ஆனால், எவராவது குருமாரைப்பற்றிஏதாவதுகுறையாகப் பேசுவது செவியில்விழுந்தாலோ அவர் முகத்தில் எள்ளுப்பொரிந்தவாறாய்ப் பொல்லாதகோபம் பொறிப்பொறியாய் எழுந்துபறக்கும். முதலிற் கொஞ்சம் கடுகடுத்துப் பேசிவிட்டுப் பின்னர் கொஞ்சம் ஆறியமர்ந்து, "தம்பிமாரே குருமாரைப்பற்றி அவதூறாகப்பேசிக் கடைசிவேளை கொம்பிசம் நன்மை இல்லாமற்தான் சாகப்போகிறீர்களா" என்று புத்திசொல்லிச் சமாதானப்படுத்திவிடுவார்.

நிற்க, ஆனைக்குட்டியும், வாழைக்குட்டியும் அந்தநாள்கூடியே அருமையான நண்பர்களாம். ஆனால், அவர்கள் ஒருவரைஒருவர் சந்திப்பதென்றால் அத்திபூத்தவாறாகத்தான் இருக்குமாம். அவ்வாறாக, அன்றொருநாள் வாழைக்குட்டி கோவிற்தலம் ஒன்றுக்குப் போயிருந்தபோது அகஸ்மாத்தாய் அங்குவந்தஆனைக்குட்டி அதைக் கண்டதே ஒருதரம் குடர்குலுங்க நன்றாய்ச்சிரித்துவிட்டு, என்ன தம்பி வாழைக்குட்டி, இப்போது நீயும்ஒரு குட்டிஎழுத்தாளனாகி விட்டாய்; கொஞ்சம் ஹாஸ்யமாயும் எழுதுகிறாய்; ஞானப்பிரகாசம் சுவாமியைப்பற்றி நீ எழுதியதை வாசித்ததுமுதல் கனவிலும் அவர்நினைவாய்த்தான் இருக்கிறது; ஏன்? ஓர்நாள்இரவு அவர் கனவில்முதலாய்வந்து ஆசீர்வாதமும் போட்டுச்சென்றார். அந்தவேளை அவரின் மலர்ந்தமுகத்திலே தவழ்ந்த புன்முறுவலை என்னென்று யான் மறக்க என்று அன்புததும்பக்கூறி, வாழைக்குட்டியை அந்தப்படியே கையிற்பிடித்து அடுத்தாற்போலிருந்த காப்பிக்கடைக்கு அழைத்துப்போய், ஓர்பால்காப்பி என்றுவிட்டு இருவரும் உள்ளேசென்று மெதுவாக உட்கார்ந்தனராம். கடைசியாக ஆனைக்குட்டியருக்கு அன்று ஒரு நியாயமான செலவுதானும்.

அதுபோக, இதுநிகழ்ந்துஏறக்குறையப் பதினைந்துவருடம். ஓர் கோவிலிலே ஞானப்பிரகாசசுவாமியார் தபசுகால ஞானவொடுக்கப் போதகஞ்செய்தார். ஒருநாள்மாலை அவர்செய்தபிரசங்கத்தை என்னென்பது? பிரசங்கமழையென்பதா? பிரசங்கப்பொழிவென்பதா? அதைப்பற்றி என்னவிதமாக வர்[illegible] குட்டி மிகஆழமாக யோசிக்கின்றது. அவ்வாறாயின் அன்று எதைப்பற்றிச் சுவாமியார் பிரசங்கஞ் செய்திருப்பாரென்று ஒருசிலரின் உள்ளத்திலே கேள்வி ஒன்று எழுகின்றதாக்கும். அதையும் வாழைக்குட்டி இதோ! சொல்லிவிடுகின்றது. அதாவது ஜெத்செமனிய பூங்காவனத்திலே எம் திருமீட்பர் சர்வாங்கமும் உதிரமாகவியர்த்ததுபற்றித்தான். அந்தப்பெரிய கோவிலிலே பெருந்தொகையாகக் குழுமியிருந்து கல்லுமே கரைந்துருகும்படியான அப்பிரசங்கத்தைக் கேட்டிருந்தாரின் உள்ளமெல்லாம் கசிந்துருகி, அவர்கள் கண்களினின்றும் தாரைதாரையாக ஓடிக்கொண்டிருந்த கண்ணீர்ப்பிரவாகத்தைக் கண்மாரி என்பதா? விண்மாரிஎன்பதா? காலமழைஎன்பதா? கடல்முகம்நோக்கிய காணுறுஎன்பதா? ஆனால், ஒருகேள்வி! அந்தவேளை வாழைக்குட்டியும் அழுதிருக்குமா? அழாமல் பின்னை!

சுவாமியார் தமது 46 வருட குருத்துவசீவியத்திலும் எத்தனையோ மகாஞானவொடுக்கங்கள் போதித்திருக்கிறார். எத்தனையோ தபசுகாலப் பிரசங்கங்கள், தர்க்கப் பிரசங்கங்கள் செய்திருக்கின்றார். எத்தனையோ பொலிவுரைகள், சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கின்றார். அவ்வப்போது அவற்றைக்கேட்டிருந்தாரும், விசேஷமாய் எத்தனையோமுறை அழுவாரைப் போலப் பிழைதீர்க்கும் மந்திரத்தை அவரோடுசொல்லிவந்தாரும் ஆகுலக் கண்ணீரென்றும், ஆனந்தக்கண்ணீரென்றும், அதிசயக்கண்ணீரென்றும், ஆர்ப்பரிப்புக்கண்ணீரென்றும் பலவிதமானகண்ணீர்களைச் சிந்தியிருப்பார்களென்று வாழைக்குட்டி சொன்னால் எல்லோரும் எழுந்துநின்று அது சொல்லுவது சரிதான் என்று கை உயர்த்திச் சம்மதம் கூறுவார்கள்என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை. ஆனால், இதற்கிடையிலே வாழைக்குட்டியின்மனதில் ஓர்கேள்வி எழுந்தால் — தெரிந்தோ, தெரியாமலோ அதைக் கேட்க முனைந்தால் — இதென்ன ஓர்நவீனமான கேள்வியாய் இருக்கிறதேஎன்று ஆருமே எண்ணவும்படாது. சொல்லவும் படாது. அதாவது இப்படியெல்லாம் மற்றவர்களை அடியாமற்கொள்ளாமல் அழவைத்த — கண்ணீர்விடவைத்த ஞானப்பிரகாசசுவாமியாரையும் ஆராவது அழவைத்திருப்பாரா? அவரும் அழுதிருப்பாரா? அழுது கண்ணீர் வடித்திருப்பாரா?

ஒருபொருத்தகேள்விதான் (தம்முடைய தர்க்கப்பிரசங்கங்களின் போதுசுவாமியார் இப்படிச்சொல்லுகிறதுவழக்கம்)வாழைக்குட்டிகேட்டது; எதையோநினைத்துத்தான் அது இப்படியெல்லாம் கேட்கிறதென்று சிலர் நினைக்கலாம். சுவாமியார் ஓர்குழந்தைப்பிள்ளையாய் இருந்தபோது அழுதிருக்கமாட்டாரா? அந்தநாளிலே குழப்பஞ்செய்தபோது பிரப்பம்பழம் வாங்கிக்குளறியிருக்கமாட்டாரா? என்றுசிலர்கேட்கலாம். அப்படி இவர்கள் ஓர்சபையில்எழுந்து கேட்பார்களாயின் அதுசபைக்கோதகேள்வியென்றே வாழைக்குட்டி தீர்மானித்து மரியாதையுடன் உட்காரும்படி அவர்களைப் பணிவாகக் கேட்டுக்கொள்ளுமாம்.

* * *

அன்றுமாலை பத்திரிசியார்கல்லூரி மண்டபத்திலே சுவாமியாரின் குருத்துவவெள்ளியூபிலிவிழாக் கொண்டாட்டம் பெருமிதமாக நடைபெற்றதல்லவா? அப்போதுசுவாமியார் அளித்த பதிலிலே ஒருமுறைக்கு இருமுறை கண்ணிரண்டும் கலங்கி அழுதார்என்பது உண்மையே. "யாழ்ப்பாணக் [illegible]களே! எனது அருமையானபிள்ளைகளே! நீங்கள் எனக்குச்செய்தருளிய இந்தப்பெரிய கொண்டாட்டங்களிலிருந்து நீங்கள் என்மட்டில் எத்துணைமேலான அன்பும், நன்றியும், அபிமானமும்கொண்டிருக்கிறீர்கள்என்பதை இன்று என் கண்ணாரக்கண்டேன்...,என்று சொன்னதுதான் தமது உள்ளத்தெழுந்த உணர்ச்சிஅலைகளை ஒருவிதமும்அடக்கிக்கொள்ளமாட்டாது சுவாமியாரின் உள்ளம் மெழுகாய்உருகியது. குரல் கம்மியது. விம்மல்பொருமியது. அவர்கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் பொத்துக்கென்றுவிழுந்து இருகன்னங்கள்வழியாகவும் உருண்டோடின. மலையேகலங்கினும் மனமே ஒருபோதும்கலங்காத சுவாமீயவர்கள் அழுததைக்கண்ணுற்றதே வாழைக்குட்டிக்கும் தன்னையறியாமலே மனம் உருகியதாம். கண்கள்கலங்கி அவற்றிலிருந்து கண்ணீர்பெருகியதாம். என்றாலும் அது எவரும்காணுதபடி முகத்துவேர்வையைத் துடைப்பது போல் சாடைசெய்து கண்ணீரைத் துடைத்துக்கொண்டதாம். அப்படித்தான் அங்கிருந்தோரெல்லாம் கட்டாயம் துடைத்திருப்பாரென்றே வாழைக்குட்டிசொல்லுகிறதாம்.

## அர்ச். இசிதோர் திருநாள்

கமக்காரரின் பாதுகாவலரான அர்ச். இசிதோர் திருநாள் வழமைபோல் மூருங்கன் கிறீஸ்துராசா கோவிலில் 30-9-51-ம் திகதி சிறப்பாகக் கொண்டாடப்படும்.

அர்ச். இசிதோரின் பக்தர்கள் தங்கள் நன்றியைக்காட்டுவார்களாக.

29-9-51 மாலை வேஸ்பர் பாடப்படும்.
30-9-51 காலை திவ்வியபாடற்பூசையும், சுற்றுப் பிரகாரமும்.

---

—யுத்தத்தின்பின் பர்மாவிலே சனங்கள் எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் அதிகமான அரிசி விளைந்திருக்கின்றது. சென்ற 1950-51-ம் ஆண்டின் மகாபோகத்திலே அங்கு விளைந்துள்ளஅரிசி 15 லட்சம்தொன் வரையிலாகும். என்றாலும்இது யுத்தத்துக்குமுன் அங்கிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த அரிசியில் ஏறக்குறைய அரைவாசியாகும்.

—கலிபோணியாவைச்சேர்ந்த எல்செகுன்டாஎனுமிடத்திலே ஆகாய பாணபலங்கொண்டு செலுத்தப்பட்ட சிறியஆகாயவிமானம்ஒன்று மணித்தியாலம் ஏறக்குறைய ஆயிரம் மைல் வேகத்திலே முன்னில்லாதஉயரத்துக்குப் பறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1935-ம்ஆண்டு 72,394 அடிஉயரத்துக்குப்பறந்த பெரியபலூனிலும் இது கூடியஉயரத்துக்குப் பறந்திருக்கிறதாம்.

### கந்தளாயும் தம்பலகாமமும்

கீழ்மாகாணத்திலுள்ள தம்பலகாமம், கந்தளாய் றெயில்வேஸ்ரேஷன்களின் பெயர்களை முறையே தம்பலகாமா என்றும், கந்தலாவாஎன்றும் மாற்ற எண்ணுவதையிட்டு இலங்கைத்தமிழரசுக்கட்சியின் தலைவரான திரு. எஸ். ஜே. பி. செல்வநாயகம், கே. சி., எம். பி. அவர்கள் எதிர்பேசித் திரிகோணமலை அரசாங்கஉதவிஏசன்றருக்கும், இலங்கை அரசாங்கறெயில்வே ஜெனறல் மனேஜருக்கும் கடிதங்கள்எழுதியிருக்கின்றார். தம்பலகாமமும், கந்தளாயும் தமிழ்மாதிரியாகப் பெயர்கள்அமைந்து அந்தந்தப் பகுதிகளும், அவற்றைச்சூழவுள்ள பகுதிகளும் தமிழ்மக்களால் குடியேறப்பெற்று அநேகநூற்றாண்டுகளாக அதிகந்தமிழ்மயமாய் இருப்பதாக அவர் தமது ஆட்சேபனையிலே தெரிவித்திருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சமாதான' முன்னணி ஒருசதி

ஐ. நா. சபையிலே அமெரிக்கபிரதிநிதிகளின் தலைவரான ஆர். ஆஸ்ரின் அவர்கள், கம்யூனிஸ்தர்கள் கண்டுபிடித்துக் கையாளுகின்ற "சமாதான" முன்னணி ஸ்தாபனம் "மக்களின் மனத்தை அடிமைப்படுத்தும் ஒருசதி" எனக் கூறுகிறார். அவ்வித கம்யூனிஸ்தகூட்டங்கள் "சமாதானநோக்கமே இல்லாதனவற்றை மறைக்க"ச் சமாதான சின்னத்தை உபயோகிக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். அமெரிக்கமக்கள் சமாதான ஸ்தாபனங்களில் சேருவது உசிதமாவென்று விசாரித்துக் கடிதம்எழுதிய ஓர் அமெரிக்கப் பெண்மணிக்குப் பதிலளிக்கையிலேயே திரு. ஆஸ்ரின் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறியதாவது: அவ்விதஸ்தாபனங்கள் ஐ. நா. சபையை ஆதரிக்கின்றனவா? அவற்றின் நோக்கங்கள், முறைகள் என்ன? என்றெல்லாம்ஆராய்ந்தே அவற்றிற்சேர வேண்டும். சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்ட உலகசமாதானசங்கமும், அதன் கிளைஸ்தாபனங்களும் பாதுகாப்பைப் பலவீனப்படுத்தும் நோக்கத்துடன் தேசங்கள்தோறும் ஏற்பட்டுள்ளன. கம்யூனிஸ்த ஆதிக்கத்திலுள்ள ஸ்தாபனங்களைத் தவிர்க்கும் ஆர்வத்தாலே சீரிய ஸ்தாபனங்களிலிருந்து மக்கள் ஒதுங்கி வாழக்கூடாது. சமாதானத்திற்காகக் களங்கமற்ற மனத்துடன் பாடுபடுகின்ற ஸ்தாபனங்கள் அனைத்தையும் ஆதரிக்கவேண்டும். ஜனநாயக மக்கள் முழுமனதுடன் புத்திசாலித்தனமாக ஒத்துழைத்தால்தான் மக்களின்லட்சியம் நிறைவேறக்கூடும்.

"சமாதானத்திற்கு முயலுவதாக நடிக்கின்ற ஸ்தாபனங்களில் சேருமுன் பின்வரும் கேள்விகளைக்கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்; ஐ. நா. சபையை ஆதரிப்பதே அந்தச்சமாதான ஸ்தாபனத்தின் முக்கியலட்சியமாக இருக்கிறதா? கூட்டுப்பந்தோபஸ்து ஏற்படுத்தல், ஆக்கிரமிப்பை எதிர்த்தல், ஐ. நா. உடன்பாடுகளின் பிரகாரம் தளவாடங்களைக் கட்டுப்படுத்தல் முதலிய நோக்கங்கள் அதற்கு உண்டா? சுதந்தரத்திற்கும், நீதிக்கும் பங்கம்இல்லாத சமாதானத்தில் அந்த ஸ்தாபனத்திற்கு நம்பிக்கைஉண்டா? "கூட்டங்களிலும், தேர்தல்களிலும் கலந்துகொள்ள அங்கத்தினர்கள் அனைவருக்கும் போதியசந்தர்ப்பம் இருக்கிறதா? இந்தச்சமாதான ஸ்தாபனம் பொதுமக்களிடையே வெளியிடும் அறிக்கைகளில் ஆக்கமான யோசனைகள் உண்டா? அல்லது வெறும்கண்டனமும் நிந்தனையும்தானா?"

## சமாதானத்திற்கே ஆபத்து

சமீபத்திலே கிழக்குப் பேர்ளின் நகரில் நடைபெற்ற "கம்யூனிஸ்த உலக இளைஞர் விழா"விற்குச்சென்ற பிறேசில்நாட்டு இளைஞர்கள் மூவர் அவ்வித விழா நடத்துவதன்நோக்கம் துவேஷப் பிரசாரமாக இருப்பதாலே, அதனால் "சமாதானத்திற்கே ஆபத்து" ஏற்படுமென்று கூறுகிறார்கள். பொன் நகரிலுள்ள பிறேசிலநாட்டு ஸ்தானிகர் காரியாலயத்தில் அவர்கள் கூறியதாவது: "மாணவர்சங்கத்தின் பிரதிநிதிகள் என்றதோரணையில் நாங்கள் பேர்ளினுக்குச் சென்றோம். ஆனால், போய்ச்சேர்ந்ததும் எமது பிரயாண அனுமதிச்சீட்டுகளைக் கம்யூனிஸ்த அதிகாரிகள் கைப்பற்றிக்கொண்டார்கள். விழாமுடிவுறும்வரை அவைகள் திரும்பக் கொடுபடவில்லை. 'சமாதான' கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகிய இவற்றிலே கலந்துகொள்ளும்படி எங்களுக்குக் கட்டளையிட்டார்கள். ஆனால், அங்கு உண்மையில் சமாதான நோக்கமேஇல்லை. அமெரிக்காமீது துவேஷமே அவ்விழாவின் நோக்கமாயிருந்தது. எவ்வித நியாயமுமின்றித் துவேஷத்தை விளைவிப்பதானது சமாதானத்திற்கு ஆபத்தாகவே முடியும்." ஏமாற்றமடைந்த இந்தஇளைஞர்கள் மேற்குஜேர்மனிக்குச்சென்று பொன் நகரிலுள்ள பிறேசில்நாட்டு ஸ்தானிகரைச் சந்தித்தார்கள்.

## யப்பானிய ஒப்பந்தம்

யப்பான் 48 நாடுகளுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்ட சில மணிநேரத்துள் பசிபிக்பகுதியிலே சமாதானத்தைப் பராமரிப்பதற்காக அமெரிக்காவுடன் ஒரு பாதுகாப்பு உடன்படிக்கையும் செய்துகொண்டது. இந்தஉடன்படிக்கையின்படி, யப்பானில் அமெரிக்கவரசு தனது படைகளை வைத்துக்கொள்ளலாம். "பொறுப்பற்ற இராணுவ ஆதிக்கவெறி உலகிலிருந்து இன்னுமே நீங்காத காரணமாக" இவ்விதஏற்பாடு அவசியமாகிறதென்று குறிப்பிடும் இந்தப்பாதுகாப்பு உடன்படிக்கையில் யப்பான்சார்பாக அதன் பிரதமமந்திரி யோஷிடா கையெழுத்திட்டனர். யப்பானிய சமாதான உடன்படிக்கையின்படி யப்பானிலே நேசநாடுகளின் இராணுவஆட்சி முடிவுறுகிறது. அதேகாலத்தில் இந்தப் பாதுகாப்பு உடன்படிக்கை நடைமுறைக்கு வருகிறது. யப்பானிலும், அதைச்சுற்றிலுமுள்ள அமெரிக்க தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகியன தூரகிழக்கிலே சமாதானத்தைப்பாதுகாக்க அமர்த்தப்படலாம் என்றும், யப்பான் வெளிநாட்டாரின் தாக்குதலுக்கு இலக்காகாதபடி அமெரிக்கபடைகள் பாதுகாப்பதுடன் "அயல்நாடு அல்லது நாடுகள்" யப்பானில் தூண்டிவிடும் கலவரங்களையும் அடக்கலாம்என்றும் இந்தப்பாதுகாப்பு உடன்படிக்கை கூறுகிறது.

## சோவியற் உதவிசெய்யவில்லை

போரினால் சேதமடைந்த இடங்களிலும், பொருளாதாரத்தில் பின்தங்கியிருக்கும் நாடுகளிலும் மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள சர்வதேச முயற்சிகளுக்குச் சோவியற்அரசு இதுவரை எள்ளளவும்உதவி செய்யவில்லை என்பதை ஜெனிவாநகரில் கூடியுள்ள ஐ. நா. பொருளாதார, சமூகசங்கத்தின்முன் அண்மையிலே எடுத்துக்காட்டினார் அமெரிக்க பிரதிநிதி இஸ்தோர் லூபின். இன்னின்ன சர்வதேச ஸ்தாபனங்களும், நிதிகளும் இருக்கின்றன என்பதையும், இவற்றில்எதற்கும் சோவியற்அரசு உதவிசெய்யவில்லை என்பதையும் வரிசையாகப் படித்துக்காட்டிய லூபின் அவர்கள் போரினாலும், மற்றவகையாலும் கஷ்டப்படும் மக்களுக்கு வெறும்வார்த்தைகளால் மனமுருகும் சோவியற்அரசு ஏன் தனது வார்த்தையைச் செயலில்காட்டவில்லை என்று கேட்டார். அவர் வரிசையாக அடுக்கிய சர்வதேச ஸ்தாபனங்களில் சர்வதேச குழந்தைகள் அவசரநிதியும், சர்வதேச நிவாரண ஸ்தாபனமும், விரிவடைந்துள்ள ஐ. நா. தொழில்நுட்ப உதவித்திட்டமும் சிலவாகும். சமூக சேவை நிபுணர்களும், பொருளாதாரத் துறையிலுள்ள நிபுணர்களும் சோவியற் அரசின் அடியில்கிடக்கும் கம்யூனிஸ்த நாடுகளில்தவிர உலகில்அநேகமாக மற்றஎல்லா நாடுகளிலும் உழைத்து வருகிறார்கள். இந்தக்கம்யூனிஸ்த நாடுகள் ஐ. நா. திட்டங்களோடு ஒத்துழைப்பதில்லை. உலகம் முழுவதற்குமாக ஐ. நா. ஸ்தாபனம் தனது தொழில்நுட்ப உதவித்திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளது. இதில் 1951-ம் ஆண்டின் முடிவுக்குள்ளேயே 1.300 பேருக்கு மேற்பட்ட தொழில்நுட்ப நிபுணர்கள் ஈடுபட்டுஉழைத்து வருவார்கள்என ஐ. நா. ஸ்தாபனமும், அதன் கிளைஸ்தாபனங்களும் எதிர்பார்க்கின்றன.

## பத்திரிகையின் எச்சரிக்கை

தீபேத்திற்நேர்ந்த கதி நேபாளத்தை எதிர்நோக்குவதாகப் பம்பாய்நகரில் பிரசுரமாகும் சோஷியலிஸ்ற் கட்சிப்பத்திரிகையான "பிறீ பிறெஸ் ஜேர்னல்" எச்சரிக்கிறது. அதன் தலையங்கம் கூறுகிறது: தீபேத்திலுள்ள கம்யூனிஸ்தபடைகள் இதுவரையிலே இந்திய—தீபேத் எல்லைவரையில் முன்னேறிவிட்டன. இச்சமபவமும், இந்திய—தீபேத்வர்த்தகத்தடைகளும்இந்தியாவால் கடுமையாகக் கவனிக்கப்படவேண்டும். செஞ்சீனாவிடம் இந்தியா நட்புப்பாராட்டி நடந்துவந்தாலும், செஞ்சீனா பதில்நட்புறவு காட்டுவதாயில்லை. இராணுவமுக்கியப் பிரதேசங்களில் விமானதளங்கள் அமைக்கப்படுகின்றன. நேபாள விஷயத்தில் செஞ்சீனாவின் நடத்தை குறிப்பிடத்தக்கது. சீனமக்களும், நேபாளமக்களும் ஒன்றுபடவேண்டுமென்று சீனமந்திரி நேபாளமாணவர் சம்மேளனத்திற்குச் செய்திஅனுப்பியிருக்கிறார். இந்தவிருப்பம் என்ன அரசியல்உருவம் பெறலாமென்பதைத் தீபேத்திற்நேர்ந்த கதியிலிருந்து ஊகித்துக்கொள்ளலாம். நேபாளம் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்புகளுடைய சுதந்தரநாடாகும். நேபாளத்தின் உள்நாட்டு விவகாரங்களில் செஞ்சீனா தலையிட்டால், இந்தியா தலையிடாமல் இருக்கமுடியாது."

## மாதோட்டத்தபால்

(நாட்டுத்தூதன்)

பாலைக்குளித்திருநாள் :— பாலைக்குளி - மூங்கில்முறிச்சான்எனும் இருகிராமங்களுக்கும் பொதுவான பரிசுத்த அடைக்கலநாயகியின் கோவிலிலே மாதாவின்ஜனனதிருநாள் இம் மாதம் 8-ந் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை கட்டளைக்குருவர் வண. S. வேந்தர்கோன் சுவாமியவர்கள் நிறைவேற்றிய பாடற்பூசையின்போது "மாதர்களின்முன் மாதிரிகையான பரிசுத்தமாதா" என்பதைப் பீடிகையாகக்கொண்டு செய்தபிரசங்கத்திலே கத்தோலிக்க குடும்பங்கள், விசேஷமாகப்பெண்மணிகள் தேவதாயாரின் தரித்திரசீவியத்தைப் பின்பற்றவேண்டும்; பொன்னாபரணங்களிலும்பார்க்கக் கற்பென்னும் சிறந்தஆபரணமே பெண்களை அழகுபடுத்தும் மிகமேலான விலைமதித்தற்கரியஆபரணம்; மாதாவுக்குகந்த நல்ல செபம் செபமாலையேஎன்னும் மணிமொழிகள்பொலிந்துவிளங்கின. பின்னர் தேவநற்கருணைஆசீர்வாதம், திருச்சுரூபசுற்றுப்பிரகாரம் அமைதியாகநடைபெற்றுத் திருநாள்நிறைவாயிற்று.

நுளம்புகளின் வெற்றிவிழா :— நிற்க, இங்கே சிலவருடகாலமாக மலேரியாத்தடைப் பகுதியாருக்கும், நுளம்புகளுக்குமிடையேநடைபெற்றுவந்த கடும்போரில் நுளம்புப்படைகள் தோல்வியடைந்து விட்டனவென்று ஆருமேநினைக்கப்படாதாம். சமீபத்திலே ஓர்நாள் இரவு கார்மேகங்கள் திரண்டு மழைக்கோலம் காணப்பட்டபோது மீண்டும்நுளம்புகள் ரீங்கார இசையோடு படைஎடுக்க முனைந்து விட்டனவாம். அத்தோடு முடிந்துவிட்டதா? இல்லை. அன்றே நுளம்புகளின் பரிமளிப்பான வெற்றிவிழா ஒன்றும் நடைபெற்றதாம். அப்போது பன்னூற்றுக்கணக்கான மின்மினிப்பூச்சிகள் மின்னிமின்னித் தீபாலங்காரஞ்செய்து விழாவைச் சிறப்பித்தனவாம்.

தலைவரின் பேருரையைத்தொடர்ந்து ஓர்இளம்யுவதியான பெண்நுளம்பு ஒன்றுஎழுந்து பெரிதும்ஆவேசத்துடன் உணர்ச்சிததும்பப் பின்வருமாறுபேசியதாம்: கண்ணியமிக்க தலைவரே! அன்பான சபையேரே! வணக்கம். நாம் இப்போதுகொண்டாடும் வெற்றிவிழாவுக்கு மூலகாரணமாக இருந்தவர் நமதுகட்சிப் பிரதிநிதியாகிய அனோபிலஸ்இனத்தைச் சேர்ந்தவரே. அவர் ஈட்டித்தந்த மகத்தானவெற்றியையிட்டும் நாம் பெருமை பாராட்டவேண்டும். அவர்செய்த அருந்தொண்டு என்னவெனில், ஒருசிலரின் காதுகளுக்குள் குசுகுசென்று ஓதிக் கோள்மூடைந்து விட்டமையேயாம். இதன்விளைவாகவே மந்திரிபண்டாரநாயகா தமதுபதவியைத் துறந்துவிட்டாராம். இன்னும் நம்மைத்தொலைக்க மாயமருந்துதெளிக்கும் மலேரியாத்தடைப்பகுதியாரும் எண்ணெய்க்குப்பதில் தண்ணீரைக்கலந்து தெளிப்பதால் அம்மருந்து சத்துஇழந்து நம்மைக்கொல்லும் வலிமைஅற்றுப்போய்விட்டதாம். இதுவும் எமக்கு ஓர்நல்லதிர்ஷ்டமே.

மேலும்அதுகூறியதாவது: இன்னும் நாம் சிறப்பாகத் தொண்டுபுரிவதற்கான அரியசந்தர்ப்பம்ஒன்று கிடைத்திருக்கிறது. இதனைநாம் கைநெகிழ்ந்துவிடப்படாது. அதாவதுகர்ப்பவதிகளின்கேவலநிலையாகும். இலங்கையின் ஏனையபகுதிகளிற்போல் இங்கேயும் கர்ப்பவதிகள் அரசினரால் பராமரிக்கப்படுவதில்லை. "புதுமைக்குவண்ணான் பறைதட்டி வெளுத்தானும்" என்றவாறாய் ஒருசிலஆண்டுகளாக ஆஸ்பத்திரிகளிலுள்ள மருத்துவமாதர்கள் வருடத்திற்கு இருமுறையாகுதல் வீடுவீடாகச்சென்று கர்ப்பவதிகளைச் சந்தித்து அவர்களுக்குவேண்டிய புத்திமதிகளைப் புகட்டிவந்தார்கள். ஆயின் இப்போதோ அவர்கள் கைவிடப்பட்டுவிட்டனர். இதற்காக நான் வைத்திய-சுகாதாரப் பகுதியாருக்கு நன்றிகூறுகின்றேன். இதனால்கர்ப்பவதிகள்பலர் பழையகால நாட்டுமுறைகளைக் கடைப்பிடித்தொழுகி மிகவும் பலவீனராக இருந்துவருகின்றார்கள். இவர்கள் மட்டிலும் நமதுதொழில்முறைகளைப் பரீட்சித்துவிட்டால் அநேகர்பிரசவத்துடன் யமலோகஞ்செலவதுதிண்ணம். ஆகவே, இவற்றைமனதில்வைத்துப் பிரமாணிக்கமாகத் தொண்டுசெய்து பூரணவெற்றிஈட்ட முயற்சிப்பீர்களாக என்பதே.

## பெற்றோர்தின விழா

கொட்டகப்புலம், பரிசுத்த அமலோற்பவநாயகி பாடசாலை சென்ற 15-9-51 சனிவாரம் அலங்காரகோலமுற்று விளங்கியது. அன்று பிற்பகல் 6-30 மணிக்குப் பாடசாலை மண்டபத்தில் பெற்றோரும் பிறரும் திரளாகத் தேங்கியிருக்க, வாத்தியங்கள்இசைக்க, கரகோஷங்கள்மத்தியிலே கட்டளைக்குருவர் வண. ஜோண் சிங்கராயர்சுவாமியவர்கள், கோவில்மூப்பர் சமத்தர் செல்லத்துரையும், சேமநிதி உத்தியோகஸ்தர் S. தனபாலசிங்கமும், மற்றுஞ் சிலபெரியோரும் புடைசூழ உயர் ஆசனத்தமர்ந்து தலைமைதாங்கிப் பாடசாலையின்மட்டில் பெற்றோருக்குரிய கடமைகளைத் தெளிவாகஎடுத்துக்கூறினர். சேமநிதி உத்தியோகஸ்தர் எழுந்து, இப்பாடசாலை சேமிப்பிலே இலங்கையில் முதலிடம் வகித்தமையைப் பாராட்டி, அதற்குப் பரிசிலாகவழங்கப்பெற்ற கொடியைச் சகலருக்கும் காணபித்து, வருங்கால சந்ததியின் வளர்ச்சி பணத்தைச்சேமிப்பதில் தங்கியுள்ளதென்று மனவருட்சிக்குரிய வகையிலே ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர். திரு. ரி. கிறிசோஸ்ரம் ஆசிரியர் கொடிப்பரிசிலும், சேமிப்புமே நமது ஊர்முன்னேற்றத்தின் அறிகுறியும், அஸ்திவாரம் என்னும் பொருள்அமையப்பேசினர். தலைமைஆசிரியர் A. மனுவேற்பிள்ளை அவர்கள் தமது குறிப்புரையிலே ஆசிரியரினதும், பெற்றோரினதும் ஒத்துழைப்பும், பெற்றோரும் பாடசாலைவரவும், பாடசாலையின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருப்பவைகள், வருங்காலத்திலே பாடசாலைதல் செய்யப்படவிருக்கும் திருத்தம் ஆதியனபற்றிப்பேசினர். ஈற்றில் பாடசாலை மாணவர்களால் சங்கீதக்கச்சேரியும், சங்கீதநடினங்களும் கும்மிஆட்டங்களும் நடத்தப்பெற்றுத் தோட்டோபசாரணையுடனும், நன்றியுரையுடனும் விழாமுற்றுப்பெற்றது. — நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்த முத்துக்கள்

—:—

## மாணக்கொடி

பன்னிரண்டாம்நூற்றுண்டுசிலுவை யுத்தம்செய்தனர்கிறீஸ்துவர்கள். ஜெருசலேம் திருஸ்தலத்தைக் காப்பாற்ற உயிரையேதந்தனர். எதிர்க்கட்சியினருக்குச் சலாதீன்என்பவர் தலைமை தாங்கிப் போர்புரிந்தார். சலாதீன் வீரதீரர். பெருந்தன்மையாளர். ஒழுக்கக்குன்று. பெருந்தியாகி. சில கிறீஸ்துவ தலைவர்களைக்காட்டிலும் இவர் வீரத்தன்மையாய் நடந்திருக்கிறூர். கிறீஸ்துவ தலைவர்களிற் சுயநலப்பிரியர்சிலர். பணத்திற்கென்றே சிலுவை யுத்தம் புரிந்தவர்களும்சிலர். பணத்தையும் குவித்தனர். கொள்ளையுமடித்தனர்.

சலாதீன் ஒருபெரும்வள்ளல். இவர் எவ்வளவுக்குத் தமதுபொருளைத் தானதர்மமாக வாரியிறைத்திருந்தார் என்றால் சாகும்பொழுது இவரிடம் ஒருகாசுமில்லை. அட்டதாரித்திர கோலத்தையே இவர்விரும்பினூர்என்பதை இவரதுமாணக்கொடியே தெரிவித்தது.

சாகுந்தருவாயில் இருக்கின்றூர் சலாதீன். தன்வீரக்கொடியைப் பிடித்திருந்த கொடிவீரனை அழைத்து: "என்ஜெயக்கொடியை யுத்தத்தின்போதெல்லாம் நீ தாங்கிச்சென்றிருக்கிறுய்; இனி நீ எனதுமாணக்கொடியைத்தான் எடுத்துச்செல்லவேண்டும்; இந்தக்கொடி ஒருகிழிந்த துணியாக இருக்கட்டும்; ஓர்ஈட்டியின் நுனியில் அதைப்பறக்கவிடு; நகரெங்கும் அதை எடுத்துச்செல்; அப்படிச்செல்லுகிறபோது வீரமுழக்கஞ்செய்; 'ஆசிய மன்னன் சாகும்பொழுது இந்தத் துணியைத்தவிர வேறென்றையும் கொண்டுபோகவில்லை' என்று.

மன்னன் இறந்துபட்டான். பிரேதத்தைஆடம்பரமாக அடக்கஞ்செய்ய எடுத்துச்சென்றனர். கொடிவீரன் மாணக்கொடியை — கந்தல்துணியை ஈட்டிநுனியில் பறக்கவிட்டு, அரசன் சொன்னபிரகாரம் பிரஸ்தாபித்தான். சனங்கள்அனைவரும் பிரமிப்புஅடையாமல் இருப்பார்களா?

## சந்தனப் பெட்டி

சாரா பெர்நாட்என்பவள் பிரசித்திபெற்றநடிகை. 1874-ம்ஆண்டு டக்றர்மார் அவளதுஉடலைப் பரிசோதித்தனர். அவள் உயிர்வாழவிரும்பினுல் இனிமேல்நாடகத்தில் சேரக்கூடாது என்றனர். ஆனுல், ஒருவாறு அவளுக்குச் சுகம்கிடைத்ததும், முன்போல் நாடகமேடைஏறி, நடிக்க ஆரம்பித்தாள். "அம்மா, நீங்கள் புத்துயிர்பெற்று வந்திருக்கிறீர்கள்; இதைக் கொண்டாடவேண்டும்; இதன்ஞாபகமாக உங்களுக்கு ஏதாவதுகொடுக்க விரும்புகிறேன்; என்ன வேண்டும்? சொல்லுங்கள்"என்று ஒருவர்கேட்டார்.

"நான்இறப்பேன்என்று சொல்லுகிறூர்கள்; ஒருபிரேதப்பெட்டி அனுப்பலாம்"எனப் பதிலளித்தாள். சில நாட்களுக்குப்பின் பிரேதப்பெட்டிகள் செய்யும் வியாபாரிஒருவரிடமிருந்து அவளுக்கு ஓர்கடிதம்வந்தது. "உங்களுக்கு ஒருபிரேதப்பெட்டி செய்து அனுப்பும்படி ஒருவர் முற்பணங்கட்டியிருக்கிறூர்; அது எவ்விதம் அமைக்கப்படவேண்டுமென்பதைத் தயவுசெய்து தெரிவியுங்கள்"என அதில் எழுதியிருந்தது. "பெட்டியைச் சந்தனக்கட்டையினுல் செய்யவும்; கைபிடி கட்டித்தங்கத்தில் இருக்கவேண்டும்"என அவள் எழுதிஅனுப்பினுள்.

அவளது எஞ்சியவாழ்நாளெல்லாம் அந்தப்பெட்டி அவளருகேஇருந்தது. அதை வைப்பதற்கென ஒரு மாக்குதிரைசெய்து அதைத் தன்படுக்கையின் கால்மாட்டில் வைத்திருந்தாள். காலையில்எழுந்ததும் அதைத்தான் முதலில் பார்ப்பாள். சிலர் ஆட்சேபித்தனர். "என்உடல் சீக்கிரம் தூசியாகும்; இதைஎனக்கு விடாதுநினைப்பூட்டவே இவ்விதம்செய்தேன்"என அவள்பதில் சொன்னுள்.

## விருதுவாக்கியங்கள்

கி.மு. ஆறும்சகாப்தத்திலே கிரேக்க நாட்டு மக்களுள் சப்தஞானிகளென்று அழைக்கப்பெற்ற எழுவர் பெரும் விவேகசாதுரியர்களாய் விளங்கியிருந்தனர். இவர்கள் எல்லோரும் ஒவ்வோர் விருதுவாக்கியத்தைச் சொல்லிவந்தார்கள். அவையாவன:

1. "உன்னை அறிந்துகொள்" என்பார் சோலன் ஞானியார்.
2. "உன் முடிவைச் சிந்தித்துக் கொள்"என்பார் கில்லோஞானியார்.
3. "உன் சமயத்தை அறிந்து கொள்" என்பார் பித்தாக்கஸ் ஞானியார்.
4. "மனிதருள் பெரும்பாலார் தீயவர்" என்பார் பியாஸ் ஞானியார்.
5. "முயற்சியால் ஆகாதது ஒன்றில்லை" என்பார் பெரியாந்தர் ஞானியார்.
6. "மிதங்கடப்பதை விலக்கு" என்பார் கிறயோப்பிலவஸ் ஞானியார்.
7. "பிணைநிற்றல் அழிவுக்கு முன்னேடி" என்பார் தேலிஸ்ஞானியார்.

இப்பூச்சக்கரத்தில் தோன்றி விளங்கிய, விளங்குகின்ற, விளங்கவிருக்கின்ற தலைசிறந்தஞானிகளுக்கெல்லாம் ஞானமும், புத்தித்தீட்சணியமும் பாலித்தவரும், பாலிக்கிறவரும், பாலிக்கப்போகிறவரும், நித்திய ஞானமானவரும், மானிடவடிவந்தாங்கிய தேவசுதனுமாகிய யேசுக்கிறீஸ்துநாதர் மனிதர் சிந்திக்கத்தானும் முடியாத எத்தனையோ ஞானவாக்குகளாகிய விருதுவாக்கியங்களைத் திருவாய் மலர்ந்திருக்கின்றூர். அவற்றிலொன்று, "மெய்யாகவேமனிதன் உலக முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தனது ஆத்துமத்தைச் சேதப்படுத்துவானுகில் அவனுக்குவரும் பிரயோசனமென்ன?"என்பதே. இந்த மகத்தான இரட்சணிய விருதுவாக்கியம் எத்தனை சீவாத்துமாக்களுக்கு நித்தியசீவியஞ் சித்திக்கச் செய்வதாயிற்று.

# கோலவிவாகம்

### மிருசுவில்

அளவெட்டிவாசரும், சிலாவத்தைத் தோட்டக் கணக்கருமான திருவளர் செல்வன் அந்தோனிப்பிள்ளை விக்றர் பீலிக்ஸ்அவர்களுக்கும், மிருசுவில் வாசரும், நுங்குவில்தோட்டக்கணக்கரும், மிருசுவில் கிராமச்சங்க உபதலைவருமான திரு. ஆர். ரி. இன்னுசிமுத்து அவர்களின் சிரேஷ்டபுதல்வி திருவளர்செல்வி மேரி யோசேப்பின் இராசமலர்க்கும் நிகழும் புரட்டாசி மாதம் 8-ந் திகதி சனிக்கிழமைகாலை மிருசுவில் சங்நீக்கிலார் ஆலயத்தில் வண. எஸ். சூசைநாதர் சுவாமியவர்களால் திருமணவைபவம் நிறைவேற்றித் திவ்வியபூசை ஒப்புக்கொடுக்கப்படலாயிற்று. பூசையின் பின்னர் புதியதம்பதிகளுக்கு அன்பர்கள், உறவினர்பலராலும் பெருந்தொகையான மாலைகள்சூட்டப்பட்டதும் பிரதிமைப்படம் பிடிக்கப்படலாயிற்று. அதன்மேல் அவர்கள் நாதசுர வாத்திய வரிசைகளுடன் மணமகள்மனைக்குச் செல்லும்வழியில் பந்தர்கள் இட்டு, மாலைகள்சூட்டி வரவேற்கப்பட்டனர். அலங்கரிக்கப்பட்ட அழகான புதிய மணமகள்மன்றம்சென்றதும் அங்கு சம்பிரமமாக உபசாரணைகள் நடைபெறலாயின. அத்தருணம் ஆசிரியர்கள், பெரியோர்கள்பலரால் நல்வாழ்த்துக்கள்கூறப்பட்டன. இப்புதியகுடும்பம் பதினுறும்பெற்றுப் பல்லாண்டுவாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருள் பாலிப்பாராக. —நிருபர்.

### அர்ச். பிரான்சீஸ்குவின்

# மூன்றுஞ்சபை

ஐப்பசிமாதம் 4-ந் திகதி வியாழக்கிழமை எமது பரிசுத்தபிதாவாகிய அர்ச். பிரான்சீஸ்குஅசீசியாரின் திருநாள்மகோற்சவமாதலால் அன்று திருவிருந்தருந்தி எல்லாச் சடங்குகளுக்கும் நேரத்தோடு சமுகங்கொடுத்து அந்தத்திருநாளை வெகுபத்திச்சிறப்பாய்க் கொண்டாடுமாறு சகோதரர்களெல்லோரும் வெகு வினயத்தோடு கேட்டுக்கொள்ளப் படுகிறூர்கள். அன்றுகாலை 6-30 மணிக்குத் திவ்விய பூசைப்பலி அவர்களுக்காக அர்ச். சூசையப்பர்சிற்றுலயத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் பொதுப்பாவமன்னிப்பு அருளப்படும். மாலை 5 மணிக்கு அதேகோவிலில் சற்பிரசாதஆசீர்வாதமும், வழமையான மாதாந்தக்கூட்டமும், சிற்றுண்டிஉபசாரணையும் நடந்தேறும். கூட்டத்தின்போது மூன்று சகோதரர் நிலையந்தஸ்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஐப்பசிமாதம் பின்வரும்தேதிகளில் சகோதரர் பரிபூரணபலன்களை அடையலாம்:— 2, 4, 5 (2), 6 (2), 10, 11, 12, 19, 26. 30, 31 (2). நிபந்தனைகள் வழமைபோல.

A. S. FRANCIS OF MARY
for Director

# விடத்தற்றீவுத் தபால்

(கிராமத் தோண்டன்)

—:—

பெற்றோரே:— நாம் பலநாள் காத்திருந்த ஆகாயவசனி வந்துவிட்டது. அதனுல்நீங்கள் நற்பயன் அடையவேண்டும். உங்களிற்சிலர் இதன்நன்மைகளையிட்டுச் சிந்திப்பதில்லை. உங்கள்பிள்ளைகளை அனுப்புங்கள். வாரந்தோறும் பிள்ளைகட்கென அரசினர் பலநிகழ்ச்சிகளை ஏற்படுத்தியுள்ளனர். இதனுற் பலதீமைகள்வருமென்று உங்களில்ஒருபாலார் சிந்திக்கின்றனர். ஆனுல் இதைப் போலும் மதியீனம் வேறென்றில்லை. சங்கீதநிகழ்ச்சிகளைமாத்திரம் அவதானித்தல் போதாது. அரிய சொற்பொழிவுகளையும் கேட்க முன்வரவேண்டும்.

ஆகாயவசனி:— 16-9-51 ஞாயிறன்று பெருந்தொகையானேர் 'கிறீஸ்துபெருமானின் திவ்விய வாழ்க்கை'பற்றிய சொற்பொழிவைக் கேட்டுக் களிக்கவென்று ஆகாயவசனி இருக்குமிடத்திற்குச் சமுகமளித்தனர். ஆங்கு குழுமியிருந்த மக்களைக் கணித்து அவர்கள் எம்பெருமான்மேல் கொண்டுள்ள நம்பிக்கையை இனிதே சிந்தித்தான் தொண்டன். பத்துமணியின்பின் மக்கள் வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமிகளது அரிய சொற்பொழிவைப் பாராட்டி, என்ன அருமையாகச் சுவாமியார் தங்களைத் தேவனுக்கு அர்ப்பணஞ்செய்தார் என்று பிரமித்துநின்றூர்கள். இவர்களதுசம்பாஷணையை மறைவிலிருந்து கேட்ட தொண்டனின்மனம் வெகுவாகப்பூரிக்கலாயிற்று.

கிராமமும் வீடுகளும்:— ஒருமரம் சோலையாகாது. பலமரங்கள் சேரவேண்டும். அப்போதுதான் அது ஓர் சோலை. அங்கேதான் அழகு. இன்றேல் சோலையுமில்லை; அழகுமில்லை. அதேபோலத்தான் ஓர்வீடு மாத்திரம் நாடாகமாட்டாது. பலவீடுகள் சேரவேண்டும். வீடுபாழடையின் நாடு பாழடையும். இன்று நமதுநிலைமையும் அப்படியே. நமதுவீடுகளை நாம் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அஃதின்றேல் நமதுநாட்டை நாமே கெடுத்தவர்களாவோம். நமது வீடுகளிலே அழகியபூமரங்களை நாட்டுதல் வனப்பைக்கொடுக்கும். இயற்கையிலேயே இறைவன்நமக்களித்த வனப்பைத்தரும்அவைகளை நாம்நாடவேண்டும். அவைகளை எம்மில்லங்களில் நாட்டி இயற்கைஅழகைப் பெருக்கவேண்டும். நமதுகிராமத்திற் சிலர் சோம்பேறித்தனத்தால் வீடுகளைக் கவனிப்பதில்லை. இது வருந்தத்தக்க செயலாகும். நமதுகிராமம் சிறக்கவேண்டுமாயின் நமதுவீடுகள், அதன் சூழல்கள் முதலியவற்றில் மிகக்கவனம் செலுத்தவேண்டும்.

தொண்டர் கடமைகள்:— எமது கடமைகளை அறிந்திருத்தல் நம் வாழ்க்கையின் பிரதான அம்சமாகும். நாட்டின்பிரசைகள் என்றமட்டில் நாம் ஒவ்வொருவரும் எத்தனையோ கடமைகட் குட்பட்டிருக்கின்றோம். நாடுஉயர்ச்சியடைய எமது கடமைகளில்ஒன்று தொண்டுபுரிதல். இது சுயநலத்தொண்டாயிராமல் பிறநலத்தொண்டாயிருத்தல்வேண்டும். நமது தொண்டைப் பொன்போல் மதிக்கவேண்டும். எப்போது அவ்விதம் மதிக்கின்றோமோ அப்போதே அதன் உயர்ந்ததன்மையை உணரலாம். இது தொண்டனின்அநுபவஞானம். கிராமாபிவிருத்திப்பகுதி மக்கள்கூட்டத்திற்கு மதிக்கரியகடமைசளை எழுதிவிடுத்துள்ளது. அதன்பாற் கண்ட முதற்கடமையை எடுத்துக்காட்டுகின்றூன் கிராமத்தொண்டன். அஃதாவது:

"தன்னைச்சூழ்ந்துள்ள மனித சமூகத்திற்கு ஒருதொண்டனின் சேவை தேவைப்படும்பொழுது அவன் சமூகசேவையில் தனக்குள்ள ஆர்வத்தைக்காட்டுவதற்கு எப்போதும் ஆயத்தமாய் இருக்கவேண்டும். தங்கள்உதவி தேவைப்படும்போது தொண்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அல்லது தொகுப்பாக அவ்வுதவியை அளிக்கவேண்டும். அல்லது மற்றையவர்கள் சமூகக்கடமைகளைச் செய்யும்படி பார்த்துக்கொள்ளவேண்டும்."

தண்ணீர் விநியோகம்:— விடத்தற்றீவுத் தண்ணீர்விநியோகத்தையிட்டுப் பலபத்திரிகைகள் பறைசாற்றின. அதன்படியே தற்பொழுது தண்ணீர் கலன்கணக்காகக் கொடுக்கப்படுகிறது. தண்ணீர்க்கஷ்டத்தினுல்வாடும் நமது சமுதாயத்தைக் கைதூக்கிவிட்ட அரசாங்கத்திற்குப் பலகோடிநமஸ்காரம். எப்போதான் தட்டுப்பாடான அளவு நீங்கி நிறையத்தண்ணீர்கிடைக்குமோ!

புத்தகநன்கொடைகள்:— எமது வாசிகசாலைக்குப் பலரும் புத்தகங்கள் உதவிவருகிறூர்களென அறிந்ததொண்டன் அகமகிழ்ச்சிஅடைகிறுன். அவர்களிற்சிலரின்நாமங்களை இங்குகாட்டுவது பலருக்கு நன்மைபயப்பதாகும். திரு. ஏ. இராசேந்திரம், (நிலையத்தலைவர்) திரு. எல். சிறில், திரு. ஏ. ஆரியதாஸ் என்பவர்களே. இவர்களது பரோபகாரசிந்தை மேலும்மேலும் ஓங்குக! இவர்களில் பொக்ஷாதிபர் திரு. எல். சிறில்அவர்களின் தொண்டுகளைப் பெரிதும் வியந்துகொள்ளுகிறுன் கிராமத்தொண்டன்.

* * *

## புத்தசமயமும் அரசியலும்

வெலிகாமத்தைச்சேர்ந்த கப்பருத்தோட்டையில் புதியதர்மசாலை ஒன்றைத் திறந்துவைத்தபின் நடைபெற்ற ஓர் பகிரங்கக்கூட்டத்திலே வெலிகாமப் பட்டினசங்க தலைவரான திரு. ஏ. பி. டலுவத்தை அவர்கள் பேசியபோது: அரசியலிலே அதிகாரத்தைப் பெறுதற்காகச் சிலபேர்கள் சமயத்தைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கின்றூர்கள்; இந்நாட்டிலுள்ள புத்தசமயிகள் அரசாங்கத்தினிடம் எந்தவிதமான உதவியும்பெறுது தங்கள்சமய நலன்களைப் பாதுகாக்கத் தங்களிலேயே தங்கியிருக்க முடியுமென நான் நினைக்கிறேன்; அவர்கள் தங்கள் சமயத்தின் பாதுகாப்புக்காக அரசாங்கஉதவியைப் பெறத்தேடுவது புத்தசமூகத்திற்கும், புத்ததர்மத்துக்கும் பெரிய இழுக்காகும் எனக்கூறிநின்றூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 509. Eng.

## "சிறகுப் பேய்கள்"

இருபத்துநான்கு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்டகால இலங்கைச் சரித்திரத்தை எழுத்திற்கொண்டுள்ள அருமையான இதிகாசத்தைச் சிங்கள சாதியினர் கொண்டிருக்கின்றனர். தமது பௌத்தசமயத்தின் விசேஷப்பட்ட அம்சங்களைப் போதிக்குமாறு கௌதமபுத்தரால் ஓர் சிலமுறைகளிலே தரிசிக்கப்பெற்ற இலங்கைத் தீவானது முன்னோர்போது மில்லாத சேமநல்வாழ்வின் யுகமொன்றைக் கண்டிருக்கிறதென்றும், ஓர் காலத்திலே இதன் குடிசனங்கள் தற்போதுள்ள சனத்தொகையிலும் எவ்வளவோ அதிகம் கூடவிருந்தார்களென்றும் அந்த இதிகாச சாசனம் எடுத்துக்கூறுகின்றது.

இவ்விதமாகச் சனத்தொகை குறையக் காரணங்கள் கண்டறியப்பட அதிகம்தூரத்தில் இல்லை. இந்தப் "பாக்கியமானதீவு" பல்வேறு காலங்களிலும் கொள்ளைநோய்களால் பாழாக்கப்படலாயிற்று. சுதேசிகளும், கடந்தகாலங்களிலே இங்குஆட்சிசெய்து அதிகாரத்திலிருந்தவர்களுமாகிய இருபாலாரும் அவற்றாலே வெகுவாகப்பாதிக்கப்பட்டு வருந்தவேண்டியோரானார்கள். 17-ம் நூற்றாண்டுக்குரிய டச்சுப்படம் ஒன்றிலே விஸ்தாரமானபகுதிகள் வெறுமையாக விடப்பட்டிருக்கின்றன. அறியப்படாத மறைந்ததரைப்பாகமாக அப்பகுதிகள் இருந்தமைதான் அதற்குக் காரணமல்ல. ஆனால், "நோய் காரணமாகச் சனத்தொகைகுன்றியது" என்ற அசுபவார்த்தைகள் அந்த வெறுமையான இடைவெளிகளுக்குக் குறுக்கே எழுதப்பட்டிருந்தன.

நமதுயுகத்தின் 238-ம் ஆண்டிலே தகமா. எஸ். போ மன்னனின் ஆளுகை காலத்திலே காய்ச்சலாலும், நோயாலும் சனங்கள் மிகமோசமாய் எவ்வாறு பீடிக்கப்பட்டிருந்தார்களென்றும், அதன்மேல் நெல்வயல்கள் எவ்வாறு செய்கைபண்ணமுடியாது இருந்தனவென்றும், இவ்விதம் காலதாமதம் ஏற்பட்டுப் பஞ்சத்தை உண்டுபண்ணினவென்றும் சிங்களரின் பாரம்பரியம் கூறுகின்றது. இந்தக்கொள்ளைநோய் "சிறகுப்பேய்" கொண்டுள்ள குரோதத்தால் உண்டானதென்று காரணஞ் சொல்லப்பட்டது. அதனால் பேய்க்கூத்தாடி அப்பேயை ஓட்டுவதற்கு அவர்கள் முயன்றார்கள். அவர்களுடைய பாரம்பரியத்தின்படி, அந்தச் சிறகுப்பிசாசு கொல்லப்படுகிறவரையில் நிலையான மனப்பாக்கியத்தைச் சனங்கள் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இன்று பேய்க்கூத்துகள்மட்டிலே அதிககவனம் எடுக்கப்படுவதில்லை. சிங்கோனமரத்தின் பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் குயினைன் என்றபெயருடையதாய்க் கொடியமலேரியாச்சுரங்களைக் குணமாக்கவல்ல சித்திகரமான மருந்தைத் தங்களுக்குக் கொடுத்திருக்கின்ற இக்கால வைத்தியசாஸ்திரத்திலேயே சனங்கள் ஈடேற்றத்தைக் கண்டுகொள்ளுகிறார்கள்.

தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தாலே நியமிக்கப்பட்ட அதிகம் நிபுணத்துவம்வாய்ந்த மலேரியாக் கும்மிஷன் 1938-ம்ஆண்டு வெளியிட்டதனது அறிக்கையிலே ஆபத்தான மலேரியாக்காலமுழுவதும் தினமும் 6 கிறேயின் குயினைன் பாவித்துவரவேண்டுமென ஆலோசனை கூறியிருக்கிறது. இன்னும ஓர்கால் மலேரியாவால் பீடிக்கப்படுமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் பாவித்துவரவேண்டுமெனச் சிபாரிசுசெய்திருக்கின்றது.

சனங்கள் மலேரியாவால் துன்பமடைந்து கெட்டழிவது இலங்கையில் மாத்திரமல்ல. ஆனால், ஆயனாந்தர நாடுகள் அல்லது உபஆயனாந்தரநாடுகளிலே எங்கெங்கும் மலேரியாகண்டு வருந்துகிறவர்கள் ஆயிரக்கணக்கிலும், லட்சக்கணக்கில்தானும் காணப்படுகின்றார்கள்.

ஆகவே, இந்தச்சனங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட நிபுணர்களால் அப்போது அருளப்பட்ட இந்தமருந்து விதிமுறைகள் கண்டிப்பாகக் கையாளப்படுவது மிகமிக விசேஷப்பட்டதாகும்.

## கிறீஸ்துநாதர் நம் தலைவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடினமாகத் தோன்றுவது தியாகமே. இப்புண்ணியத்தை நம்தலைவர் எப்படிச்சாதித்தார் பார்ப்போம். சுயநலவாதிகளான பரிசேயரை அவர்வன்மையாகக் கண்டித்தார். தன்னலமறுப்பே ஆன்மாவைத் தெய்வீகமாக்குமென முழங்கினார். தம்பொருட்டு நாம் அனைத்தையும் துறந்து தம்மைப்பின் செல்ல நம்மை அழைத்தார். போதித்தபடிதாமேஅனைத்தையும் துறந்தார். கிறீஸ்துநாதர் தியாகம்செய்யாதது ஏதாகிலும் உண்டோ?

கிறீஸ்துநாதர்ஒருவரே உண்மையில் "தமக்கெனவாழாப் பிறர்க்குரியர்." மனிதஅவதாரத்தின்போதே மகத்தான தியாகம்! தமதுதெய்வீகத்தை மறைத்தார். "தம்மையே வெறுமையாக்கி" அடிமையின் வேடம்பூண்டார், விண்ணுலகில் தமக்கிருந்த நித்தியமகிமையின் பெருமையைநீத்து, உதவாக்கரைஉலகில், ஏதோ ஓர் பட்டியில்மறைந்த ஏழைவாழ்வைத் தெரிந்துகொண்டார். கடைசியாகத் தமது அற்புத தாயையும் விட்டுப்பிரிகிறார். அருமை அன்னையின் இன்பஇல்லத்தை நீத்து, அக்கிரம உலகிற்குச் செல்கிறார். அன்றுமுதல் ஒரே அலைச்சல், ஓய்வு ஒழிவின்றி அன்புப்பணி. தங்கவீடில்லை. தலைசாய்க்க இடமில்லை. இவையெல்லாம் தியாகத்தின்விளைவுகள் அல்லவா?....

துன்பம்இழைத்தவர்களையேசு வெறுத்தாரா? பகைவனையும் நேசிக்க அவர்தம்மையே ஒறுத்தார். தியாகமேலீட்டால் அனைத்தையும் பொறுத்துக்கொண்டார். "என்னைப் பின் செல்கிறவன் தன்சிலுவையைச் சுமந்துகொண்டு என்பிறகே வரட்டும்!" என அவர் இயம்பிய மொழிகள் வரண்டமொழிகள் அல்ல. தம்வாழ்விலே அவர் கடைப்பிடித்த உயர்ந்தஇலட்சியங்கள். ஆதலின் கிறீஸ்துநாதர் நமதுஒப்பற்றதலைவர். என்பதுநிச்சயம். அவருடைய வாக்கும் வாழ்வும்ஒன்றே. தமது வாக்கைத் அவர்வாழ்வாக்கினார். தமதுவாழ்வைத் தம்முடைய தொண்டர்களுக்குக் கட்டளைவாக்காக விட்டுச்சென்றார். அவரைப்பின்தொடரத் தயங்குவோமா? நெப்போலியன் உலக அதிபன். அவனது படைவீரர் ஊதியம்கருதியே உழைத்தனர். ஆயினும் தலைவனின்வழியே தயக்கமின்றிச் சென்றபெருமை பூண்டவர்கள். நாம் சர்வாதிலோக கர்த்தரின் தொண்டர். "நான் உலகைவென்றேன்" என [illegible] மீட்பர் நம்தலைவர். தோல்வியே அடையமுடியாத வெற்றிவேந்தர் கிறீஸ்துபிரான் நம் தலைவர். அப்படியானல், கிறீஸ்துவவீரர்களே, நம் தலைவர் வகுத்தவழிசெல்லமயங்கலாமா?

(இ. தூ.)

# பரிசுத்த பாத்திமா மாதா சுருப ஸ்தாபகம்

கொச்சிக்கடை அர்ச். அந்தோனியார் கோவிலிலே நிகழும் புரட்டாசிமாதம் 29-ந் திகதி சனிக்கிழமைமாலை 7 மணிக்கு வேஸ்பர்பாடியபின் பரிசுத்த பாத்திமாமாதாவின் சுரூபம் மந்திரித்து ஸ்தாபிக்கப்படும்.

30-ந் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 7-30 மணிக்குப் பரிசுத்த பாத்திமாமாதாவுக்கு நன்றியறிந்த தோத்திரமாக ஓர் பாடற்பூசை நிறைவேறும்.

இவ்விழாவிற்கு அனைவரும் விஜயம்செய்து அவ்வன்னையின் ஆசீரைப்பெற்றுச் செல்லுமாறு வெகுவினயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கொழும்பு சம்பை வியாபாரிகள்

கொழும்பு, 23-9-51.

## சுதேச வர்த்தமானம்

### இலங்கை சுவர்க்கம்

ஊவா, சப்பிரகாமா, மத்தியமாகாணங்களிலே வளர்ந்தோரின்கல்விநிலையங்களை நிர்மாணிப்பவரான திரு. சோமரத்ன விஜயசிங்க அவர்கள் சென்ற 19-ந்திகதி யக்கெல்லை வளர்ந்தோர்கல்விநிலையத்தின் ஆரம்பகூட்டத்தில்பேசியபோது, "இந்தியாவுடன் ஒப்பிட்டுப்பார்க்கும்போது இலங்கை ஓர் சுவர்க்கமாகும்; இந்தியாவிலுள்ளபாடசாலைகளில் அதிகமானவை கட்டடங்கள்இல்லாக் குறைவாலே மரங்களின்கீழ் வெளியான இடங்களில் நடத்தப்படுகின்றன; இந்தியாவிலுள்ள சிலசனங்கள் அதிகம்வறியவர்களாய் இருப்பதாலே பட்டினியால் மடிகிறார்கள்" எனக்கூறியிருக்கின்றார்.

### ஞாபகார்த்த குதிரைப்பந்தையம்

இலங்கைக்குதிரைப்பந்தைய சரித்திரத்திலே இதற்குமுன் எக்காலத்திலுமில்லாத மிகவிலைபெற்றவெகுமதிகளைக்கொண்ட பந்தயம்ஒன்று அடுத்த வருடத்திலே மாட்சிமைதங்கிய ஜோர்ஜ்அரச தம்பதிகளது இலங்கை விஜயத்தின் ஞாபகார்த்தமாக நடைபெறவிருக்கிறது. பந்தையப்பரிசுச்சின்னம் ஏறக்குறைய 8,000ரூபாபெறுமதியுள்ள ஓர்தங்கக்கிண்ணம். அத்துடன் பந்தையப்பணம் 25,000 ரூபாவாகும். தங்கக்கிண்ணத்துக்கு ஜோர்ஜ்அரசரின்நாமம் வழங்கப்படும். முதல்வகுப்புக்குதிரைகளே பந்தையத்திற் கலந்துகொள்ளும். பந்தையதூரம் ஒன்றேகால்மைல்.

### ரேகுப்பகுதிப் புதியலோஞ்ச்

கடலிலே களவாகச் சாமான்களை ஏற்றிச்செல்லுகிறவர்களைக் கண்டுபிடிப்பதற்கெனத் தற்போது ரேகுப்பகுதி நல்லநிலைமையிலுள்ள ஓர் லோஞ்சைக் கொண்டிருக்கிறது. ஆனால், களவிலே நடைபெறும் ஏற்றுமதிகள் அதிகரித்துவருங்காரணமாக 2,12,350 ரூபா செலவிலே ஓர் புதியலோஞ்சைக் கட்டித்தரும்படியாக அது பிரித்தானிய கம்பெனிஒன்றுக்கு ஆடர்அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது. இந்தப்புதிய லோஞ்ச் டீசல்எஞ்சின் பூட்டியதாய் இவ்வருட இறுதியிலே பாவனைக்குத் தயாராயிருக்கும்.

### கிராமக்குளங்களின் திருத்தம்

கிராமாபிவிர்த்தித் தலைவரிடமிருந்து தமக்குக்கிடைத்த ஓர் சுற்றுக்கடிதத்தின்பேரிலே வடமத்தியமாகாணத்திலுள்ள கிராமக்குளங்களைத் திருத்தும்வேலைகள் அங்குள்ள கிராமாபிவிர்த்திச்சங்கங்களிடம் ஒப்பந்தத்திலே கொடுபடவேண்டுமென்று அம்மாகாண ஏசன்றர் சிபாரிசுசெய்திருக்கின்றார். ஏலவே அவரால் பதினைறுகுளங்களைத் திருத்தும்வேலைகள் 20,000 ரூபா ஒப்பந்தத்தில் அச்சங்கங்களுக்குக் கொடுபட்டுள்ளன.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த பாத்திமாமாதா (பண்டத்தரிப்பு)வின் அனுக்கிரகத்தினல் நான் கேட்டமன்றாட்டு இனிதுநிறைவேறியதினல் நன்றியாக இதைப்பிரசுரிக்கிறேன். இவளின்நாமம் சகலராலும் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம், யோண் யோசப்

### நன்றியறிந்த தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், அர்ச். அந்தோனியாரின் மன்றாட்டாலும் வேலைநிமித்தமாகக் கேட்டமன்றாட்டு அனுகூலமானதால் நன்றியறிதலாக இதைப்பிரசுரம் செய்கிறேன்.

(பெயர்போட விரும்பாதவர்)

## JAFFNA MUNICIPAL COUNCIL

**Supplementary Budget (No. 3) 1951.**

**Notice** is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that Supplementary Budget No. 3 of the Jaffna Municipal Council for the year 1951, which is to be laid before the next general meeting of the Council, will be open to public inspection at the Municipal Office for seven days commencing from Wednesday the 3rd October 1951.

C. Ponnambalam,
Mayor of Jaffna.

Municipal Office,
Jaffna, 25th Sept. 1951.

## Government Vacancies.

JAFFNA KACHCHERI

Applications for posts of (1) Village Cultivation Officers in Jaffna District (2) Overseer of Land given under the L. D. O., will be received up to 12 noon on 3-10-51.

For particulars see Part 1-Section II, Govt. Gazette, 21-9-51, copies of which are available for perusal at all Post Offices.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 27 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org